# இயல்: 5

## விளிம்பு நிலை மக்களுக்கானத் தீர்வுகள்

மக்களின் அன்றாட வாழ்வியலைக் கதைகளாகக் கூறும் தன்மைச் சிறுகதை மற்றும் புதினங்களுக்கே உண்டு. மக்களால் விரும்பிப் படிக்கப்படும் இலக்கியங்களாகவும் உள்ளது. பொழுதுப் போக்கினை மையப்படுத்தி எழுதப்பட்ட இவ்விலக்கியங்கள் இன்று சமூகத்தின் நடப்புகள், இன்பத்துன்பங்கள், சிக்கல்கள் எனப் பேசும் இலக்கியங்களாகத் தன்னை மாற்றிக் கொண்டமைக்குக் காரணம் இது ஒரு வாழும் இலக்கியமாகத் திகழ்வதினால் தான். மனிதனின் வாழ்வியலுக்கான நிகழ்வுகளை இதனுள் பதிவுச் செய்யப்படுவது இதனின் சிறப்பு எனலாம். வரலாற்று ஆவணங்களாகக் கருத முடியாத நிலையிலும் படைப்பாளர்கள் தங்களின் எழுத்துக்களின் மூலம் இதனை ஆவணங்களாகவே மாற்றுகின்றனர். ஆதலால்தான் சிறுகதை மற்றும் புதினங்களில் காணப்படும் கதைகளையோ மாந்தர்களையோ விமர்சிக்கும் முறை எழுந்தது. இதனை நவீன இலக்கியங்கள் என்றும் மக்களின் இலக்கியங்கள் என்றும் அழைப்பதைக் காணமுடிகிறது. இந்த நவீன இலக்கியங்களானப் புதுக்கவிதை, கட்டுரை, அறிவியல் கட்டுரைப் போன்றவைகளுள் சிறுகதை, புதினம் ஒரு புதிய இடத்தைப் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் இது மனித வாழ்வைப் பிரதிபலிப்பதுதான். கண்ணாடிப் போல இருப்பதை எடுத்துரைக்கும் தன்மை வாய்ந்த இவ்விலக்கியங்கள் வாயிலாக, இல்லாததும் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. ஆயினும் இவ்வாறு இல்லாத, நிகழாத, உண்மையில்லாத நிகழ்வுகளை இந்த இலக்கியங்களுள் சொல்லும் போது, சிறுகதையும் புதினமும் தன் இலக்கியப் பண்பை இழந்து விடுகிறது என அறிஞர்கள் கூறும் கருத்திற்கு ஏற்ப உண்மையான, மனித அல்லது சமூகத்திற்கு ஒவ்வாத, கதைகளை யாரும் ஏற்பதில்லை.

இன்றைய நவீன இலக்கியங்களுள் முதன்மைப்பெற்றதுமானச் சிறுகதை, புதினம் போன்ற இலக்கியங்கள் தனிமனித வாழ்வு, சமூக நிலை என இருவேறு தளங்களில் நின்றுக் கதைகளாகச் சொல்லாமல், வாழ்க்கையின் பிரதிபலிப்பாகவே மாறுகிறது.

குடும்பம், தனிமனிதன், சமூகம், உறவுகள், வேலைபார்க்கும் இடம், தொழிலாளி, முதலாளி, சிறுவர், பெண்கள், முதியவர்கள், மருத்துவ மனைகள், கல்வி

நிறுவனங்கள், சாதிய ஏற்றத்தாழ்வு, சமயச்சார்பு, காழ்ப்புணர்ச்சி, இலாபம், நட்டம், மகிழ்ச்சி, துன்பம், ஏமாற்றம், நிறைவு, என அனைத்திலும் படைப்பாளரின் எண்ணங்கள் ஊடுறுவிச் சென்று இவற்றையேக் கதைப்பொருளாக்கி உரைக்கின்றனர். கற்பனைகளாக இருந்தாலும் அவற்றுள் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்பதே இன்றைய அறிஞர்களின் கருத்தாகும்.

அந்த வகையில் சிறுகதை, புதினம் போன்றவற்றில் இமையம் என்ற படைப்பாளரின் கதைகள் எவ்வாறு மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கிறது என்பதும், குறிப்பாக விளிம்பு நிலை மக்களின் பதிவுகளாகக் காணப்படும் இவற்றில், இவர்களது வாழ்க்கையின் மீதான எண்ணங்கள் எவ்வாறு தீர்வுகளாக இருக்கிறது என்பதும், விளிம்பு நிலை  மக்களின் வாழ்வியலுக்கான தீர்வுகள் எந்த வகையில் இதனுள் சொல்லப்படுள்ளது என்பதனை மையமாகக் கொண்டு "இமையம் படைப்புகளில் விளிம்பு நிலை மக்களின் விடுதலைக் காணத் தீர்வுகள்" என்ற தலைப்பில்  இவ்வாய்வு அமைகிறது.

## 5.1 யார்? நவீன எழுத்தாளர்கள்:-

இலக்கியங்கள் காலந்தோறும் படைக்கப்பட்டே வருகிறது. சங்ககாலம் முதல் இன்று 21-ம் நூற்றாண்டு வரையிலானத் தமிழ்ப்படைப்புகள் எண்ணற்றவை. காலங்களின் பதிவுகளாகத் தோன்றிய இவ்விலக்கியத்தின் படைப்பாளர்கள் யார்? இன்றும் இலக்கியங்களைத் தோற்றுவிக்கின்றனரோ? அவரே நவீன எழுத்தாளர் எனலாம். இக்கருத்தைச் சற்றே சிந்தித்துப் பார்த்தால் பக்தியியல் சார்ந்து பக்திப்பாடல்கள் எழுதும் படைப்பாளர்கள், கல்விச் சார்ந்து பாடப் புத்தகங்களை எழுதி வரும் படைப்பாளர்கள் இவர்களும் நவீன எழுத்தாளர்களா? என்ற கேள்வி நம்மில் தோன்றும்.

பொதுவாகவே நவீன எழுத்தாளர்கள் என்போர் கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம், அறிவியல் கட்டுரைகள் என்பனவற்றைப் படைப்போரே நவீன எழுத்தாளர்கள் என அழைக்கப்படுகின்றனர். காரணம் இலக்கிய வகைமைகள் தமிழில் எண்ணற்றவை உள்ளன. ஆனால் ஐரோப்பியரின் வருகையினரால் தமிழில் தோன்றியப் புதிய இலக்கியங்களாகக் கருதப்படும் சிறுகதை, புதுக்கவிதை, புதினம், கட்டுரைகள் என்பனவற்றை யார் தற்காலத்திலும் படைத்து வருகின்றனரோ! அவர்களே நவீன எழுத்தாளர்கள் எனலாம். இந்தக் கருத்தும் சற்றே மாறியுள்ளதை நம்மால் உணர முடிகிறது. அப்படியென்றால் உண்மையான நவீன எழுத்தாளர்கள் என்போர் யார்? என்ற கேள்வி நம்மில் மீண்டும் தோன்றுகிறது. இந்த கேள்விக்கானப் பதிலாக நாம் எவற்றைக் கூறலாம்?

நவீன எழுத்தாளர்கள் என்போர் மக்களுக்கானப் பிரச்சனைகளைப் பற்றி எழுதுவோர், என பொருள் கொண்டால் அன்றாடம் செய்தித் தாள்களில் கூறப்படும் அல்லது எழுதப்படும் எழுத்தாளர்களை நாம் நவீன எழுத்தாளர்கள் எனக் கூறலாமா? சற்றே, யோசித்துதான் பார்க்க வேண்டும்.

தனிமனித வாழ்வில் அல்லது குடும்பத்தில் அல்லது சமூகத்தில் உள்ள வாழ்க்கைக்கானப் போராட்டங்களின் நிகழ்வுகளை எடுத்துரைத்தல், சிக்கல்களைப் போக்குவதற்கான தீர்வுகளைக் கூறுதல், பேசத் தயங்கியச் சாதிய முரண்பாடுகளைப் பேசுதல், சமயப் பேதங்களைப் பேசுதல், சமயச் சார்புள்ள, சார்பற்ற உண்மைகளைப் பேசுதல், பிரச்சனைகளைப் பேசுதல் என கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை என்ற ஏதேனும் ஒரு வகைமைக்குள் தன் எண்ணங்களைப் படைத்துக்காட்டுவோரே நவீன எழுத்தாளர்கள் எனலாம். இந்த விளக்கம் சற்று ஆறுதலாக உள்ளது.

## 5.2 நவீனம்: Modern:-

> **நவீனம் என்பது தற்காலம் இதனை ஆங்கிலத்தில் Present Days எனச் கூறுவர். Modren – என்ற சொல்லாட்சியே சரியானதாக இருக்கும். Modern – என்ற ஆங்கில வார்த்தைக்குப் புது மாதிரி, தற்காலத்திய நவீனம் என லிப்கோ என்னும் ஆங்கில அகராதி விளக்கம் தருகிறது. 'Modern' என்ற ஆங்கிலச் சொல் 'Adjective' ஆக சொல்லப்பட்டுள்ளது.' 'Adjective' என்றால் தானாக பூர்த்தி ஆகாத, சார்ந்திருக்கின்ற, பிரிதொன்றைத தழுவி நிற்கும் சொல் என பொருள் படுகிறது. இதனை தமிழில் "பெயரெச்சம்" என்பர். Modern – என்ற ஆங்கிலச் சொல் அதாவது Sub clauses என்ற இந்த சொல் தமிழில் "நவீன" என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது.**[1]

"நவீன" என்ற வார்த்தையின் பொருள் தற்காலத்திய, இன்றைய என்னும் பொருளில் கையாளப்படுகிறது. இவ்வார்த்தை முழுமைப் பெறவில்லை. இச்சொல் முழுமைபெறுவதற்கு பெயர்ச் சொற்களில் ஏதேனும் ஒன்றை தழுவி நிற்கவேண்டும் அப்பொழுது முழுமை பெறுவதைக் காணலாம். உதாரணம் நவீன சினிமா, நவீன படைப்பு, நவீன எழுத்தாளர், நவீனச் சிந்தனையாளர், நவீனக் கட்டுரையாளர், நவீனச் சிற்பி, நவீனப் பிச்சைக்காரன், நவீன மக்கள், நவீன மாற்றம், நவீன நாடகம், நவீன நாகரிகம் எனக் கூறலாம். அந்த வகையில் மேற்கூறப்பட்ட விளக்கத்தின்

வழியே நவீன எழுத்தாளர் என்போர் தற்காலத்தில் அல்லது இன்றைய நாட்களில் (காலங்களில்) வாழ்வோர் எனப் பொருள் கொள்ளலாம். Modern – நவீன என்பதற்கேற்ப எழுத்தாளர்களின் படைப்புகளும், படைப்புகளுள் கூறப்படும் சிந்தனைகளும் கருத்துக்களும் கதைகளும் ஒருப் புதியத் தன்மையாக இருக்க வேண்டும். அப்பொழுதான் அவர் நவீனப் படைப்பாளர் அல்லது நவீன எழுத்தாளர் என அழைக்க முடியும். உதாரணம்: பழையக் கதைகளையோ இலக்கியங்களையோ உள்ளது உள்ளவாறு எடுத்து எழுதினால் அவர்களை எவ்வாறு நவீன எழுத்தாளர்கள் எனக் கூற முடியும்! எனவே நவீனம் என்பது புதுமையானது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.மேலும்,

| | |
|---|---|
| Modren - | புது மாதிரி |
| | தற்காலத்திய |
| | நவீன |
| | தற்காலத்தவர் |
| Modrenism- | புதுமைக் கருத்துகளும் உரைகளும் |
| Modrenisation- | தற்கால கருத்துக்களுக்கும் நோய்களுக்கும் ஏற்ப புதுப்பித்தல் |
| Modernize- | தற்கால முறைக்கேற்ப புதுப்பி காலத்திற்கேற்றவாறு அமை[2] |

என்ற விளக்கங்கள் "நவீன" என்பதற்கானப் பொருளினை நமக்கு நன்குப் புரிய வைக்கிறது.

## 5.3 புதுமை என்றால் என்ன?

புதுமை என்பது எழுதுவதில் புதுமை, எழுதும் கோலில் புதுமை, கல்வியில் புதுமை, கற்பித்தலில் புதுமை, அறிவுரைக் கூறுவதில் புதுமை, தொழிலில் புதுமை, நாகரிகத்தில் புதுமை,ஆக மொத்தத்தில் புதிய ஒன்றைப் புதுமை என்கிறோம். ஐம்பது ஆண்டுகள், இருபதாண்டுகள், பத்தாண்டுகள் இந்தக் காலத்தையும் கூட புதுமை என்றப் பொருளில் யாரும் கையாள்வதில்லை. எனவே புதுமை என்பது தற்காலத்தியது எனப்பொருளினைக் குறிக்கிறது எனலாம். அதேவேளையில் நவீன என்பதை இன்று என்ற பொருளில் கையாளப்படுவதையும் காணலாம்.

புதுமை என்பதில் மேலும் சிலப் பதில்கள் அடங்கியிருப்பதைக் காணலாம். பத்து அல்லது அதற்கு முற்பட்ட ஆண்டுகளில் "தலித்" என்ற வார்த்தையை பயன்பாட்டில் காணமுடியாது. ஆனால் இன்று தலித் என்ற வார்த்தை பயன்பாட்டில் உள்ளதை புதுமை எனலாம். மக்கள் இருபதாண்டுகளுக்கு முன்னர் பெண்கள் வீடுகளில் "நைடீஸ்" என்ற ஆடையை பயன்படுத்தியதைக் காண முடியாது. ஆனால் இன்று அந்த ஆடை பொதுவானதாக ஆக்கப்பட்டு பெரியவர் முதல் சிறியவர் வரை (பெண்கள் மட்டும்) வீடுகளில் உடுத்துவதை புதுமை எனலாம்.

பள்ளிகளில் பாடங்களில் புதுமை, கற்பித்தலில் புதுமை இன்றையத் தொழில் நுட்ப முறை அனைத்தும் புதுமை எனலாம். இவையெல்லாம் நடைமுறையில் காலத்தின் கட்டாயமாகப் பின்பற்றவதைக் கொண்டே "புதுமை" "New" என்ற பொருளில் வழங்கி வருகிறோம். ஆனால், நாம் வாழும் உலகம் நாளுக்கு நாள் மாறிவருவதைக் காணலாம். நம்மில் மாறாதது சாதி மட்டுமே. இதனைப் புதியது எனக் கூறமுடியாது. பழைய மரபைப் பின்பற்றும் எதனையும் புதிய என்றப் பொருளில் கையாளுவதில்லை. ஆதலால் பழமைக்கு நேர்மாறானவற்றையேப் புதிய என அழைக்கின்றனர். இந்தப் புதிய என்பது ஸ்டைலாக நவீன எனச் சொல்லப்படுகிறது. நவீன என்பது "புதுமை" என்றப் பொருளில் மட்டுமேக் கையாளலாம்.

முன்னர் "தலித்"கள் தலித் கோயில்களில் அனுமதிக்காமல் இருந்தனர். இன்றோ அனைவரும் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். இதுவும் புதுமை எனலாம். முன்னர் இலக்கியங்களில் "தலித்" இன மக்களை தலைமைப் பண்பைப் பெற்றதில்லை. (பள்ளு இலக்கியம் தவிர). ஆனால் இன்றோ! "தலித்" மக்களை மையப்படுத்தியும், அவர்தம் வாழ்வியலையும் குறித்து இலக்கியங்கள் தோன்றுவதை புதுமை எனலாம்.

பெண்களைப் பற்றியும், அவர்தம் சிக்கல் பற்றியும் முன்னர் எழுதப்படவில்லை. இன்றோ பெண்களின் முன்னேற்றம் குறித்தும் அவர்தம் விடுதலை குறித்தும் பேசுவதை புதுமை எனலாம்.

எனவே புதுமை என்பது முன்புப் பேசப்படாத, எழுதப்படாதச் சிந்தனைகளைக் குறிப்பது. இன்று எழுதுதலும், முன்பு கடைபிடித்து வந்த கட்டுப்பாடு, சமூக வழக்கம், போன்றவற்றை விடுத்து இன்று அவர்களுக்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்வது "புதுமை" என அழைக்கலாம். மேற்குறிப்பிட்ட விளக்கங்களின் வழியே உணரலாம். தனிமனித வாழ்விலும் கூடப் புதுமை இருப்பதை உணர முடிகிறது. முன்னர் "வரதட்சணை" குறித்த வழக்கம் இருந்தது. இன்று இளைஞர்களே வேண்டாம் என மறுப்பது புதுமை எனலாம்.

இவ்வாறு புதுமை ‘New’ என்பதற்குப் பல்வேறு பொருளில் கருத்துக்களை முன்வைத்தாலும் இது ஏதோ ஒரு புதுமை நோக்கில் அமைந்து விடுகிறது.

இன்று இலக்கிய உலகில் அல்லது வேறு துறைகளில் புதுமை என்பது என்ன? எனப் பார்ப்போம். "சினிமா" என்ற திரைப்படத் துறையில் ‘Motion Capture Picture’ ‘Dolpy System’ ‘3D’ போன்ற தொழில்நுட்பங்களை "புதுமை" எனலாம். நடிப்பு என்ற முறையிலும் "புதுமை" உள்ளது எனலாம். உடுத்தும் ஆடைகள், பேசும் வசனங்கள், திரையிடப்படும் திரையரங்குகள் என அனைத்திலும் புதுமை உள்ளது. பத்து அல்லது இருபதாண்டுகளுக்கு முன்னர் திரைப்படங்களை ஒரே நாளில் திரையிடப்படும். ஆனால் இன்று வாரத்திற்கு மூன்று திரைப்படங்கள் எனவும் முக்கியத் திருவிழாக்களில் போதும் இதே முறையைப் பின்பற்றி திரைப்படங்களை வெளியிடும் முறையும் புதுமை எனலாம்.

நாடக நடிகர்கள் மட்டுமே திரைப்படங்களில் நடிக்க முடியும் என்ற நிலையும், முன் அனுபவம் இல்லாமலே திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர், தொழில்நுட்பம் என அனைத்தும் கால் பதிப்பது என்பது புதுமை என்றே கூறலாம்.

இதனைக் காட்டிலும் திரைப்படத் துறையில் புதுமை என்பது இதுவரை சொல்லப்படாதக் கதைகளான எளிய மக்களின் உண்மை நிலையினை திரைப்படமாக்குவதுப் புதுமையிலும் புதுமை எனலாம். தலித்துகள் முன்னர் எடுபிடி வேலை, உதவி செய்தல், துணை நடிகர் என்ற அளவில் இருந்தனர். இன்றோ இயக்குநர்களாக, படத் தயாரிப்பாளர்களாக, கதாநாயகி, கதாநாயகர்களாக, இசையமைப்பாளர்களாக, தொழில்நுட்பக் கலைஞர்களாக எனப் பல்வேறு பரிணாமங்களில் வலம் வருவதுப் புதுமையிலும் புதுமை எனலாம். கிராமங்களில் வாழும் மக்கள் அதிலும் "தலித்" மக்களின் வாழ்வியலை சித்தரித்துக் காட்டுதல், நகர்ப்புறத் "தலித்"களின் வாழ்வியலைச் சித்தரித்துக் காட்டுதல் என இவையும் புதுமைப் படைப்புகளே எனலாம்.

எனவே இந்த விளக்கங்களின் துணையுடன் நவீன இலக்கியப் படைப்புகள் எவையெவை எனக் காணலாம். சங்கஇலக்கியங்களில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றுள் புதுமையைக் காண முடியாது. அன்றைய மக்களின் வாழ்வியல் சூழலை எடுத்துக்காட்டும் வரலாற்று ஆவணங்கள் அல்லது தமிழ் மொழியின் பழமையை எடுத்துரைக்கும் சான்றுகள் என்றே கூறலாம். ஆனால் புதுமை இல்லை. இதனைப்பின் ஒட்டித் தோன்றிய இலக்கியங்களான பக்திஇலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், உரை இலக்கியங்கள் இவையாவும் புதுமை

இல்லை, ஆனால் தமிழ் மொழியில் தனிச்சிறப்பு பெற்றுள்ள இலக்கியங்கள் எனலாம். அவ்வாறெனில், புதுமை இலக்கியங்கள் என நாம் எவற்றைக் கூறுவது? ஐரோப்பியர் வருகையின் பின்புத் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் "புதுமை" என்றே கூறலாம்.

முன்பு கூறியச் சங்கஇலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் இவையனைத்தும் ஏதேனும் ஒரு பொதுத் தன்மையில் தமிழ் மொழியில் தோன்றிய என்ற அளவில் நின்று சிறப்பிக்கப்படுமேயன்றி, மக்களின் வாழ்வியலின் முரண்பாடுகளையோ, சிக்கல்களையோ! துன்பங்களையோ, அதற்கான தீர்வுகளையோ முன்வைத்து பேசாத இலக்கியங்களாக இதனைக் காணமுடிகிறது. ஆனால் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்பு தோன்றியச் சிறுகதை, புதினம், புதுக்கவிதை, கட்டுரை போன்ற இலக்கிய வகைமைகள் சாதாரண, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கிறது. மக்களிடையேயுள்ள முரண்பாடுகளை எதிர்த்துப் பேசியது, அடக்கு முறைகளை எதிர்த்து குரல் கொடுத்து, பெண்களின் முன்னேற்றம் குறித்துப் பேசியது. ஒடுக்கப்பட்டோரின் வாழ்க்கையில் துன்பங்களை எடுத்துக் கூறியது. சாதிய, சமயப் பிரச்சனைகளை சாடியது. ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு குமறியது. ஆதலால்தான் சிறுகதை, புதினம், புதுக்கவிதை, கட்டுரை ஆகிய இலக்கிய வகைகள் தமிழின் புதுமை இலக்கியங்கள் எனப்படுகிறது. இங்கு புதுமை என்பதே மக்களின் முரண்பாடுகளை எடுத்துச் சொல்லி புரிய வைத்தல், சாதிய, சமய பிணக்குகளைக் களைய முற்படுதல், எடுத்துரைத்தல், பெண்களின் விடுதலைக்கானத் தீர்வுகளை உரைத்தல் அல்லது பெண்களின் அவலநிலையை வெளிக்கொணருதல் , தலித் மக்களின் விடுதலைகானத் தீர்வினைக் கூறுதல், தலித் மக்களின் சாதியக்கொடுமைகளை வெளிக்கொணருதல் போன்றவற்றை மையப்படுத்தி தோன்றிய இலக்கியங்களை அல்லது படைப்புகளைப் புதுமை இலக்கியங்கள் என்பர்.

அப்படியென்றால் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் இவற்றில் இந்த பண்புகள் இல்லையா? என்றால் நிச்சயமாக இல்லை. ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்கள் "சாதி" என்ற வேறுபாட்டால், பாகுப்படுத்தப்படிருந்ததை இது மனிதத் தன்மைக்கு எதிரானது என்று எந்த ஒரு இலக்கியமும் கூறவில்லை. பெண்களின் நிலையும் அவ்வாறே. ஆதலால், தலித்துக்கள், பெண்கள் ஆகிய இருவருக்கும் உள்ள காலங்காலமாக தொடரும் பிரச்சனைகள் அவற்றிற்கானத் தீர்வுகள் என்பனவற்றை இந்த இலக்கியங்களில் காண முடியாது. இலக்கியங்கள் அனைத்தும் உயர்க்குடி, மேல்ச்சாதி என்ற வகுப்பினைப் பற்றியேப் பாடப்பட்டிருப்பதைக் காணலாம் .

"சாதி" அமைப்பு தவறு, பெண்களை அடிமைகளாகப் பார்ப்பது தவறு என்று எந்த ஒரு இலக்கியமும் கூறியதில்லை.

ஆனால் புதுமை இலக்கியங்களான சிறுகதை, புதுக்கவிதை, புதினம், கட்டுரைகள் ஆகியவைகள் இந்த இரண்டு பொருள் பற்றி (தலித்துகள் பெண்கள்) பல்வேறு விதமாக அவர்களின் வாழ்க்கைப் பிரச்சனைகள், சங்கடங்கள், துன்பங்கள், வறுமைநிலை, சிக்கல்கள், தொழில்முறை சிக்கல்கள், என அனைத்து பொருள் பற்றியும் எடுத்துரைத்து நிற்கிறது. இவ்வாறு இதன் தன்மைகள் பண்புகளாக இருப்பதால் இவற்றையே நவீன இலக்கியங்கள் எனலாம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

சிறுகதை, புதினம், கட்டுரை, புதுக்கவிதை போன்ற இலக்கியங்களில் தலித் மக்களைப் பற்றியோப் பெண்கள் பற்றியோ ஆரம்பக் காலக்கட்டங்களில் பேசவில்லையென்றாலும், பாரதியார், பாரதிதாசன், பிச்ச மூர்த்தி போன்ற புதுக்கவிதைப் படைப்பாளர்கள் இந்த இரண்டு பொருள் பற்றி பேசியுள்ளனர்.

சிறுகதைகளோ, புதினங்களோ ஆரம்ப காலத்தில் அதாவது தமிழில் இந்த இலக்கியங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட நாட்களில் சாதிப் பாகுபாடு பற்றியோ, பெண்களின் நிலை பற்றியோ சரிவர எடுத்துரைக்கவில்லை. சாதிப் பார்ப்பது தவறு என்றும் உரைக்கவில்லை. சாதி என்பது தவறு என்றும் உரைக்கவில்லை. பெண்களின் நிலை மோசமாக உள்ளது எனக் கூறவுமில்லை. என்பதை இங்கு நாம் ஒப்பு நோக்க வேண்டும்.

இதனை படைக்கும் மக்களும் தலித்துகளாக இல்லை. பெண்களாகவும் இல்லை இந்த இலக்கியங்களைப் படைக்க தலித்துகளுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஒரு காலத்தில் கல்வியே மறுக்கப்பட்டிருந்தது. ஆதலால் பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கண நூல்கள் போன்ற இலக்கியங்கள் படைக்கும் உரிமை மேல்தட்டு மக்களாகிய உயர்க்குடியினரிடமே இருந்தது. அதனால் "புதுமை" என்ற சிறப்பு அதனுள் இல்லாமல் இருந்தது.

நவீனம் என்பதே மக்களின் பிரச்சனைகளைப் பேசுவது. தலித் மக்களின் வாழ்க்கையைப் பேசுவது, மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பேசுவது, எழுதுவது, பெண்களின் விடுதலையைப் பேசுவது, பாலியல் தொல்லைகளைப்பற்றி எழுதுவது, தலித் மக்களின் தொழில் சார்ந்தச் சிக்கல்களைப் பேசுவது, சமத்துவத்தைப் பேசுவது, என்றப் பொருளிலேயே "நவீன" என்றச் சொல்

கையாளப்படுகிறது, என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இவற்றை நவீனச் சிந்தனைகள் என்று கூட அழைக்கலாம்.

ஆதலால், சிறுகதை, புதினம் போன்றவற்றில் ஆரம்பக் காலத்தில் இத்தகைய நவீனச் சிந்தனைகள் இல்லாமலேயே இருந்தது. காலத்தின் மாற்றம், கல்விச் சிந்தனைகளில் மாற்றம், சமூக மாற்றம், ஆண் பெண் சமம் என்றச் சிந்தனை, தலித்துகளும் இந்தியர்களே! தமிழர்களே! மனிதர்களே என்றச் சிந்தனைகள் அனைத்தும் பிற்காலத்தில் தோன்றியதே. இவர்கள் அனைவரும் நவீனச் சிந்தனையாளர்கள் என்றே அடையாளப்படுத்துகின்றனர். பாரதியார், பாரதிதாசன், புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், லட்சுமி, கு.பிச்சமூர்த்தி போன்றோர்கள் நவீனச் சிந்தனையாளர்கள் என்றேக் கூறலாம். இவர்களுக்கு அடுத்துள்ள தலைமுறையில் எண்ணற்ற எழுத்தாளர்கள் இவ்விருப் பொருள்பற்றி எழுதவும், பேசவும் செய்தனர். இவர்களே நவீனச் சமுதாயச் சிற்பிகள் எனவும் அழைக்கப்பட்டனர்.

கவிதைகள் மூலம், சிறுகதைகள் மூலம், புதினங்கள் மூலம், சாதியப் பிரச்சனைகள், அடக்கு முறைகள், சுரண்டல்கள், பாலியல் வன்முறைகள், வரதட்சணை, பாகுபாடு, முரண்பாடுகள் என அனைத்தையும் பற்றிப்பேசி, விடுதலைக்கானத் தீர்வுகளுக்கான வழிமுறைகளைக் கூறுவதாக இப்படைப்புகள் அமைந்தது.

தந்தை பெரியார் இவர்களுள் தலையாயச் சிறந்தவர். சாதி என்பது தவறு என்றும், சாதி பார்ப்பது அயோக்கியத்தனம் என்றும், பெண்களை அடிமையாக எண்ணுதல் கொடுமையானது எனவும் மிகவும் வன்மையாக முழங்கிய முதல் இந்தியக்குடிமகன். இவர் கண்டித்ததுடன் பேசவும், எழுதவும் செய்தார். ஆதலால், நவீனச் சிந்தனையாளர்களின் "தந்தை" என்றே இவரைப் போற்றலாம். இவரைப் போன்று யாரும் இதுநாள் வரையில் தலித்துகளுக்கும் பெண்களுக்கும் ஆதரவு குரல் கொடுத்ததில்லை.

எனவே தலித்துகளின் ஒடுக்குமுறைக்கு எதிரானப் படைப்புகள், சாதி பாகுபாடுகளைத் தவறு எனக் கூறும் படைப்புகள் தலித்திய இலக்கியங்கள் எனலாம். இவ்வகையில் தலித் மற்றும் பெண்களுக்கான விடுதலைக் குரல் கொடுத்து வருவதில் "இமையம்" ஒரு தனித்த இடத்தைப் பெற்றுள்ளார்.

நமது நாட்டின் முன்னேற்றம் என்பதேத் தலித் மக்களின் முன்னேற்றம் என்பதேயாகும். சாதியப்பாகுபாட்டில் மேல்நிலையில் உள்ளப் பெரும்பான்மையோர் நல்ல நிலையிலேயே உள்ளனர். நூறு சதவீதத்தில் தொன்னூறு சதவீதத்தினர்

முன்னேற்றம் அடைந்த நிலையிலே உள்ளனர். ஏனைய 10% சதவீத மேல்சாதியினர் பொருளாதாரத்தில் மட்டுமே பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தலித்துகளில் 100% -த்தில் 98%-த்தினர் கல்வி இல்லாமை, சுரண்டலுக்கு, ஒடுக்கு முறைக்கு ஆளாகி வறுமை, ஏழ்மை, பசி, பட்டினி, சொந்த வீடு இல்லாமல், நிலம் இல்லாமல், வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளனர். 1% சதவீதத்தினர் அரசுத் துறையில் நல்ல வேலை வாய்ப்பில் உள்ளனர். மீதி 1% த்தினரை நிலமுள்ள தலித்துகள் என அடையாளப்படுத்தலாம்.

ஆகவே "தலித்" மக்களின் வாழ்வியலைப் பற்றி எழுதிவரும் படைப்பாளர்களுள் வை.பாலசுந்தரம், பெருமாள்முருகன், சூரிய காந்தன், உஞ்சை ராசன், கே.ஏ.குணசேகரன், அ.மார்க்கீஸ், வி.அரசு, ராஜ்கௌதமன், பாமா, திலகவதி, வேதசகாயகுமார், சிவகாமி, இமையம், பிரேமா, ஈரோடு தமிழன்பன், கவிதா சரண், போன்றோர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

## 5.4 தலித் அல்லது விளிம்பு நிலை சார் இலக்கியங்கள் படைக்கும் போது கவனிக்க வேண்டிய சிந்தனைகள்:-

மேற்கூறப்பட்டத் தலித் சிந்தனையாளர்கள், கண்டுக்கேட்ட அனுபவங்களை மட்டுமேத் தங்களின் இலக்கியங்களில் பதிவு செய்கின்றனர். ஆனால் உணர்வு என்ற அடிப்படையில் இவர்கள் "தலித்" அல்லாதப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். "தலித்" அல்லாத படைப்பாளர்களால் ஒருபோதும் தலித்துக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாது என்பது இன்றை இலக்கியவியலாளர்களிடையே உள்ள கருத்தாகும். சாதியால் பாதிக்கப்பட்ட தலித்துகளினால் மட்டுமே அந்த உணர்வை எழுதமுடியும் என்பதான விவாதங்கள் நடைபெற்றுவரும் இக்காலக் கட்டத்தில் இமையம் என்ற படைப்பாளர் தலித் மக்களைத் தன் முதன்மைப்பாத்திரங்களாக்கிப் படைத்துவருவது கேள்விக்குறியாகவே உள்ளது எனலாம்.

சாதிய ஒடுக்கு முறைகளுக்கு ஆளானத் தலித்துகளின் வாழ்வே விசித்திரமானது. முதலாளிகளால் சுரண்டப்பட்டு, அடிமைகளாக, விலங்குகளாக நடத்தப்பட்டு இன்றும் கூனிக் குறுகி நடைபோடும் "தலித்" இன மக்களின் வாழ்வியலின் பதிவுகளைப் பிறச் சமூகத்தில் பிறந்தவர்களால் எவ்வாறு உணர்ந்து

எழுத முடியும். சாதிப்பாகுபாட்டில் ஈராயிரம் ஆண்டுகளாக அடிமை, இழுக்கானவர்கள், தீண்டப்படாதவர்கள் என்றச் சுமையைச் சுமந்து வரும் தலித்துகளின் வாழ்வியலை இவர்களால் எவ்வாறு புரிந்துக் கொள்ள முடியும்? தலித்துகளைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் தலித்துகளோடு வாழ்வதாலோ, பழகினாலோ போதாது, தலித்துகளாகவே பிறக்க வேண்டும். பிறந்தால் ஒழிய தலித் உணர்வுகளை ஒருபோதும் பிறரால் உணர முடியாது. இதனை,

**"விளிம்பு நிலை சமூகங்களை வெளியிலிருந்து பார்க்கும்**

**பார்வை வேறு, உள்ளிருந்து பார்ப்பது வேறு"[3]**

என்ற கருத்தும் வலியுறுத்தும்.

## 5.5 படைப்பாளருக்கானத் தகுதிகள்:-

இலக்கியங்களைப் படைப்பதற்கு ஒரே தகுதி எழுதிப் படிக்கத் தெரிய வேண்டும் என்பதேயாகும். எழுதத் தெரிந்தவர், படிக்கத் தெரிந்தவர் அனைவரும் இலக்கியம் படைக்கத் தகுதியானவர்கள். ஆனால் எழுதுவதற்குப் பொறுமையும், சிந்தனைகளும் வேண்டும். இங்கே எத்தனைப் பேருக்குப் பொறுமையும், சிந்தனையும் இருக்கிறது. சிந்தனை என்பது நல்லது, கெட்டது என்ற இரு வேறுத் திசைகளில் பயணிப்பது. பயணத்தின் பாதைத் தெளிவாக இருப்பின் போய்ச் சேருமிடம் எளிதில் / நல்ல முறையில் அடையலாம். ஆனால் மோசமானப் பாதையில் சென்றால், விளைவுகள் அதிபயங்கரமானதாக இருக்கும். சிந்தனைத் தடங்களும், பயணங்களும் அது போல்தான். ஆதலால் நல்லச் சிந்தனையேப் படைப்பாளரின் அடிப்படைத் தகுதிகளாகக் கூறலாம். நல்லச் சிந்தனையுடன் இலக்கியங்கள் படைக்கும் போது சிறிய அளவிலானக் கற்பனை, அனுபவம் போன்றவையும் தேவைப்படுகிறது. ஆதலால் கற்பனை என்பது இங்குக் கட்டற்றுப் போனால் அது சுவையாக இருக்காது என்பதால்தான் தற்கால நவீன எழுத்தாளர்கள் கற்பனைகளை தவிர்த்து அனுபவ ரீதியில் எழுதி வருகின்றனர்.

## 5.6 இலக்கியம் படைக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை:-

இலக்கியங்கள் மனிதனின் (படைப்பாளரின்)அனுபவத்தில் எழுவது. அவ்வாறு எழும் இலக்கியங்கள் ஏதேனும் ஒரு கருத்தை அல்லது சிந்தனையை முன்னுறுத்தி சொல்லப்படுபவைகளாக இருக்க வேண்டும். சிந்தனைகளாக அழகுற அமைத்து, நடப்பியல் அனுபவங்களை எழுதும்போது அது கூடுதலான பொருண்மையை

பெறுகிறது. அதே வேளையில், படைப்பாளர் தாம் கற்றக் கல்வியை முழுவதும் உபயோகித்துப் படைத்தலோ, வெறுமனே அனுபவங்களைக் கொண்டு படைத்தலோ! அது இலக்கியங்களாக இருக்க முடியாது. அது ஒரு மொழிச்சார்ந்தக் கல்விச் சார்ந்த இலக்கியங்களாகக் கருத முடியுமேத் தவிர, அவற்றை நவீன இலக்கியங்கள் எனக் கூற முடியாது.

சிறுகதை, புதினம் போன்ற இலக்கியங்களைப் படைக்கும் போது, அவற்றில் மக்களின் வாழ்க்கை பிரதிபலிப்பதாகச் செய்ய வேண்டும். குறிப்பாக விளிம்பு நிலை மக்களை படைப்புக்குரியவர்களாக மாற்றும் போது, அது உண்மைத் தன்மையில் அமைய வேண்டும். இமையம் படைப்புகள் இத்தன்மையில் அமைவதைக் காணலாம்.

விளிம்பு நிலை மக்களுக்கான அடையாளங்களைக் கூறி கதை அமைத்தல் சிறப்பானதாக இருக்கும். சாதியின் பெயரைச் சொல்லி கதை அமைக்கும் போது அது மீண்டும் ஒரு பின்னோக்கியதாக மாறிவிடும்.

## 5.7 இமையம் என்ற படைப்பாளரின் அடையாளம்:-

விளிம்பு நிலை மக்களின் வாழ்வானது மிகவும் சிக்கலான, வறுமையைப் பற்றியதாகவே இருக்கும். அவர்களின் வாழ்க்கையில் சாதிய அடுக்கமுறைகளுக்கு அல்லது சாதியப் பாகுபாடுகளுக்கு எவ்வாறு ஆட்படுகின்றனர் என்பதும், இந்த ஏற்றத்தாழ்வுகள் குறித்து எடுத்துரைக்கும் போது அவற்றினூடே இழிவுகள், புறந்தள்ளுதல், சமதர்மமின்மைப் போன்றவற்றை எடுத்துரைத்து அவற்றுக்கான தீர்வுகளைப் படைப்புகளாகப் படைக்க வேண்டும் என்ற இந்த கருதுகோளினைக் கொண்டு "இமையம்" படைப்புகள் விழிம்பு நிலை மக்களின் நிலையை (Possition) எவ்வாறுப் படைத்துக் காட்டியுள்ளது என்பதைப்பற்றியும் விளிம்பு நிலை மக்களின் சமூக விடுதலைக்கானத் தீர்வுகளான கருத்துக்களை எவற்றை முன்வைக்கிறது என்பதைப் பற்றியும் இனிக் காண்போம்.

தமிழ் இலக்கியவுலகில் தலித் மக்களுக்கான ஆதரவுக் குரலினை பொதுவுடைமைக் கட்சி இலக்கியங்களிலும், திராவிட இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இவற்றைச் சாதி எதிர்ப்பு இலக்கியங்களாக இனங்காணலாம். ஆனால் முழுக்கமுழுக்கத் "தலித்" மக்களுக்கான ஆதரவுக் குரலினைத் "தலித்" இலக்கியங்களின் வாயிலாகவேக் காணமுடியும் என்பதற்குச் சான்றாக ராஜ்கௌதமன் அவர்களின் இலக்கிய விமர்சனம் குறித்தக் கருத்தின் மூலம் அறியலாம்.

**"பொதுவுடமைக் கட்சி இலக்கியங்களில், திராவிட இலக்கியம் வழங்கியப் புனித ஏழைக்குச் சிவப்புச் சட்டை மாட்டி விடப்பட்டது. சாதி அடையாளம் மாற்றப்பட்டது. இந்த சிவப்பாடையணிந்த ஏழைகள் முதலாளிகளை எதிர்த்தனர், பண்ணையார்களை எதிர்த்தார்கள். இதுவரை தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பிலக்கியங்களில், பொதுவுடமைக்கட்சி இலக்கியமே, மொத்த அமைப்பை எதிர்த்துக் குரலிட்டதாக அமைந்தது. வர்க்க அரசியலைக் கவனப்படுத்திய இவ்விலக்கியம் குடும்பம், சாதி ஆகியவற்றில் கோட்டைவிட்டது. பொருளாதார ரீதியில் பின்தங்கியத் தங்கள் சாதித் தலைமையின் கட்டளைப்படி சிவப்புச் சட்டைகளைக் கழற்றிவிட்டு, உண்மையானச் சாதி நிர்வாணத்தை வெளிக்காட்டினார்கள். தங்களுக்குக் கீழிருந்தப் புனித ஏழைகளின் குடிசைகளை எரித்தார்கள்; அவர்தம் பெண்களை வலிந்து புணர்ந்தார்கள்; கால்நடைகளையும் மனிதரையும் ஒரு சேர வெட்டினார்கள்"[4]**

இந்த விமர்சனத்தின் மூலம் திராவிட இயக்கங்கள், பொதுவுடமைச் சிந்தனை இலக்கியங்கள் ஆகியவை தலித்துகளின் குடும்பம், சாதி என இரண்டையும் தவிர்த்தது முதலாளிகளை மட்டுமே எதிர்த்தது என்பதை இதன் வாயிலாக உணரமுடிகிறது. நவீனத்துவம், பின்னை நவீனத்துவம், மார்க்கீசியம் போன்ற வகைமைகளில் தலித் - சார்பு இருக்கிறது. ஆனால், சமுதாயத்திற்கு எதிரான குரலோ, எதிர்ப்போ இல்லை.

திராவிட இயக்கம் சார்ந்த இலக்கியங்களான (பெரியாரைத் தவிர) மாத, வார, இதழ்கள், பத்திரிக்கைகள், சிறுகதை, புதுக்கவிதை, புதினங்கள், கட்டுரைகள் யாவும்? "தலித்" மக்களின் வாழ்வியலின் ஒரு சிறுபகுதிகளையோ அல்லது சிறிய அளவிலானப் போராட்டங்களையோ முன்வைத்து பேசியுள்ளது ஆனால், முழுமையான அளவில் "தலித்"ப்பற்றியதாக அது இல்லை என்றேக் கூறலாம். அப்படியென்றால் "தலித்" மக்களைப் பற்றியதான இலக்கியம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை ராஜ்கொளதமனின் கருத்தின் வழியே உணரலாம்.

**"தலித் இலக்கியம் அல்லது "தலித்" மக்களைச் சார்ந்த இலக்கியம் என்பது, எல்லா வகையிலுமுள்ள ஒடுக்கு முறைகளை எதிர்த்து, இனித் தனக்குக் கீழ் ஒடுக்குவதற்கு**

**எதுவும் இல்லாத நிலையை உருவாக்கும் நோக்குடைய இலக்கியத்தைத்தான் தலித் இலக்கியம் என்று கூறலாம். சாதி, மதம், குடும்பம் (பாலியல்) சுரண்டல் பொருளாதாரம் ஆகியவற்றை நிர்மூலமாக்குகின்ற அரசியல் நிலைப்பாடு எடுத்து, இனியொருச் சாதியோ, மதமோ, குடும்பமோ, சுரண்டலோ உருவாகாதபடி செயல்படுவதையேத் தலித் இலக்கியம் எனலாம். இத்தகைய அரசியலை மேற்கொண்ட, கருத்தியல் ரீதியில் தலித்துக்களான அனைவராலும் இத்தகு தலித் இலக்கியத்தைப் படைக்க முடியும்."[5]**

என்ற கருத்துரையில் தலித் இலக்கியம் என்பதற்கான விளக்கம் கூறுவதுடன், தலித் மக்களின் ஒடுக்கு முறைகளுக்குக் காரணமான சாதி, சமய, சுரண்டல், அரசியல் போன்றவற்றை எதிர்த்து தோன்றும் இலக்கியங்களைத் "தலித்" என்றும், இனிமேல் தனக்கு அடுத்து ஒரு சாதியும் இல்லை என்பதை மனதில் கொண்டு படைக்கும் எதுவும் தலித் இலக்கியங்களே எனவும் பொருள் கூறுகிறார். தலித் மக்களால் படைக்கப்பட்டால் தலித் இலக்கியம் என்றும், பிறரால் படைக்கப்பட்டால் அது "தலித்" சார்புடைய இலக்கியங்கள் என்றும் அடைவுபடுத்தலாம் என்பதை ராஜ்கௌதமன் போன்றோர்கள் கருதவில்லை. எனவே சாதியத்தை நேரடியாக எதிர்த்து, தலித் மக்களின் தொழில்,வாழ்க்கை தொடர்பானவற்றிற்கு தீர்வுகள் மூலம் தன் கருத்துக்களை எடுத்துரைப்பது தலித் இலக்கியம் எனலாம்.

அந்த வகையில் "இமையம்" என்ற படைப்பாளர் அடிப்படையில் தலித் இனத்தைச் சார்ந்தவர் இல்லை என்பது இங்கு குறிப்பிட வேண்டும். இவரது படைப்புகள் பெரும்பான்மையானவை "தலித்" மக்களின் வாழ்வையேச் சித்தரிக்கிறது என்பதால் "தலித்" சார்புடைய இலக்கியங்கள் என்ற அடைவுற்கு உட்படுத்தலாம். "தலித்" சார்புடைய இமையம் படைப்புகள் மூன்று சிறுகதைத் தொகுப்புகளும், மூன்று புதினங்களும் படைத்துள்ளார். மூன்று புதினங்களுமேத் தலித் மக்களின் வாழ்க்கையை முன்னிருத்தியேப் படைக்கப்பட்டுள்ளது. மூன்று சிறுகதைத் தொகுப்புகளில் உள்ளச் சிறுகதைகளில் பாதி அளவில் அதாவது ஐம்பது சதவீதம் தலித் மக்களின் வாழ்வியலின் சூழலை மையப்படுத்தியுள்ளது.

### 5.8 "இமையம்" - படைப்பாளர், ஏன் தலித் மக்களின் வாழ்க்கைச் சூழலை மையப்படுத்தி எழுத வேண்டும்:-

இத்தலைப்பானது அலகு -4-ல் "இமையத்தின் படைப்பு அரசியல்" என்ற தலைப்பில் முன்னர் கூறப்பட்டுள்ளது.

படைப்பாளர் ஒரு நவீன இலக்கியவாதியாக, நவீனச் சிந்தனையாளராக வலம் வருபவர். எத்தனைப் பிரிவு மக்கள் சமூகத்தில் காணப்பட்டாலும், குறிப்பாக தலித் விளிம்பு நிலை மக்களைக் குறித்தானப் படைப்புகள் ஏன் படைக்க வேண்டும்? என்ன தேவை? என்றக் கேள்விகளுக்கு, பதிலாகச் சிலக் கருத்துக்களை அவரின் படைப்பின் வாயிலாகவே முன் வைக்கலாம்.

இவர் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர். கடலூர் மாவட்டம் தலித்துகள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டமாகத் திகழ்கிறது. இவரது புதினங்கள் மூன்றும் (ஆறுமுகம், கோவேறு கழுதைகள், செடல்) கடலூரைச் சுற்றியே கதை நிகழ்வதாக அமைக்கப்பட்டுள்ளது. இவர், தான் சிறுவயது முதல் கண்டு தெரிந்தவற்றையேக் கதைப் பொருளாகவும் ஆக்கியிருப்பார். இந்த மூன்று புதினங்களும் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிகழும் நிகழ்வாகவே இருக்கும். இது அனுபவ ரீதியானப் படைப்புகள் என்பதற்கு வேறு எந்தவிதச் சான்றும் தேவையில்லை. அதே போல், இவர் "தலித்" ச்சமூகத்தினரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருப்பார் போலும், அதனால்தான் தொடர்ச்சியாகக் கோவேறு கழுதைகள் - 1994-லும், ஆறுமுகம் - 1999-லும், செடல் -2006- எனப் படைத்துள்ளார். இந்த காலவரையில் பார்த்தால், ஏன்? தலித் சமுதாயத்தினரைப் பாடுபொருளாக, கதைப்பொருளாக கொண்டு புதினம் படைக்கவேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. சமுதாயத்தின் மீது அக்கறையுள்ள எவரும், சமூகம் சார்ந்தப் படைப்புகளைப் படைப்பது தவறில்லை. ஆனால் தொடர்ச்சியாக ஏன் "தலித்" மக்களைக் கதைப் பொருளாக்க வேண்டும்? காரணம் இதுவாகவோ? அல்லது அதுவாகவோ? இருக்கலாம் என்பதற்குப் பதிலாக நாமே ஆய்வாளன் என்ற முறையில் இரண்டு காரணங்களைக் கூறலாம்.

1. தலித் மக்களின் பண்பாட்டுக் கலாச்சாரத்தின் மீதுள்ள அக்கறையினால், வாழ்க்கை சூழல், இன்ப துன்பங்கள், ஒடுக்க முறையினால் விளைந்த பாதிப்புகள் - இவற்றை வெளிக்கொணர இவருக்கான ஆர்வம்.

2. "தலித்"மக்கள், தங்களுக்கான ஒரு தனித்த அடையாளங்களுடன்வாழ்ந்துவருகின்றனர். ஆனால் இவர்கள் எதற்கு விடுதலை என்பதை நோக்கிச் செல்ல வேண்டும்

இவர்களின் வாழ்வே அடங்கிப்
போதல் என்பதே, வீணாக ஏன்?
போராட்டம், புரட்சி என்று

பிறரை இம்சிக்கின்றனர் என்ற ரீதியில்
"தலித்"களின் இழிவான வாழ்வைச் சுட்டிக்
காட்டல்

என்ற இரண்டுக் காரணங்களில் இவரதுப் படைப்புகள் தோன்றியிருக்கலாம், என்ற இவ்விருக் கருத்தாக்கங்களின் வழியைப் பின்பற்றி இவரதுப் படைப்புகள் எதனைச் சார்ந்து இயங்குகிறது என்பதைக் காணலாம்.

## 5.9 இமையம்: தலித் மக்களின் மீதான தான் கொண்ட ஆர்வம்:-

தலித் மக்களின் வாழ்வியலைச் சார்ந்து சிறுகதைகள், புதினங்கள் ஆகியவற்றைப் படைத்து தனிக்கென்றத் தனித்த இடத்தைப் பெற்றிருப்பவர் இமையம், இவரது இயற்பெயர் அண்ணாமலை என்பதாகும்.

**5.9.1 கோவேறு கழுதைகள்:** புதினத்தில் பறையர்கள் எனச் சொல்லப்படும் ஆதித்திராவிடத் தலித்துகள், சாதிய விடுதலைக்கானப் பலபல போராட்டங்களை நிகழ்த்தி வரும் வேலையில், "புதிரை வண்ணார்" என்ற சமூகம் ஒரு கீழ்மையானச் சாதியப் படிநிலைக்குட்பட்டு மேலும் கீழானச் சாதியாக இன்றும் இருக்கின்றனர் என்ற அவல நிலை கோவேறு கழுதைகள் என்ற புதினத்தின் மூலம் உலகினுக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் வாழும் "பறையர்"ச்சாதியைச் சார்ந்தவர்களுக்குச் சேவைச் செய்யும் அடிமைகளாக "புதிரை வண்ணார்" என்றச் சமூகம் காணப்படுகிறது. இச்சமூகத்தின் பின்னணி, வாழும்முறை, இவர்களுக்கானச் சமூகநிலையில் இடம், வாழும் இடம், உறவுகள், இவர்களுக்கானப் பண்பாட்டுக் கலாச்சாரம் என்பனவற்றை வெளிக்கொணரும் விதமாக இந்நாவலைப் படைத்துள்ளார்.

இந்தியச் சமூகங்களில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருச் சாதியும் பலக் கூட்டுக் குழுக்களாக இயங்கி வருகிறது. இந்தக்குழுக்கள் நிலையானவைகளாகவோ, நிலையற்றவர்களாகவோ இருக்கலாம். ஆனால், சாதி என்ற அடிப்படையில் மேல், கீழ் என்ற நிலை, சாதிக்குரிய, சமயத்துக்குரிய நிகழ்த்து கலைகள், திருவிழாக்கள், திருமணச் சடங்குகள், தொழில்கள் என இவையனைத்தையும் இந்த கூட்டுக் குழுக்கள் பெற்றிருக்கும். ஆனால் "புதிரை

வண்ணார்” என்ற இந்தச் சாதியைச் சார்ந்தவர்களுக்கு நிலையான வாழும் இடம் இல்லை, தனித்தக் கலைகள் (ஆட்டம், நிகழ்த்து கலை) இல்லை, திருவிழாக்கள் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் இல்லை ஆனால் படிநிலையில் கீழான இடம் மட்டும் உண்டு. அடிமைகளுக்கு அடிமைகளாக வாழ்ந்து வரும் இவர்கள் . இவர்களுக்கான அடையாளம் இல்லாத நிலையில், இவர்களை தன்க் கதைக்குரியப் பொருளாக்கிப் புதினமாக எடுத்துரைக்கும் இமையத்தின் முயற்சிப் பாராட்டுக்குரியது. இந்த கோவேறு கழுதைகள் என்றப் புதினத்தின் வழியாகப் புதிரை வண்ணார் இனமக்களின் வாழ்வியலின் அவலங்களைச் சுட்டிக்காட்டுவதுடன், (மற்ற) (சமுதாயத்தினர்) உலகத்திற்கு அறிமுகம் செய்துவைக்கப் படுகிறது. இமையத்தின் சமூகம் சார்ந்த அக்கறை நமக்குப் புரிகிறது. இந்த இனமக்கள் தனித்த அடையாளம் இல்லாமல், கூட்டமாக நிலையுள்ள குடும்பமோ இல்லாமல் எவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதனை உணர்த்தியுள்ள விதம் ஒரு சமூகச் சிந்தனையாளர் என்ற அளவிற்கு இமையத்தை உயர்த்துகிறது.

## 5.10 படைப்பாளர் இமையத்தின் சிறப்புகள்:-

கோவேறு கழுதைகள் என்றப் புதினம் ஒரு சமூக வரலாற்று நூல் எனச் சொல்லும் அளவிற்கு “புதிரை வண்ணார்” சமூகத்தைப் பற்றிய சமூக வாழ்வியல் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

> **“ஒரு சமூகச் சிந்தனையாளரின் கடமை என்பதே “ஒடுக்கு முறையில் சிக்கித் தவிக்கும் சமூகத்தை அல்லது மனிதர்களை இனம் கண்டு, அவர்களது நிலையை உலகிற்கு எடுத்துரைத்து அந்த சமூக/மனிதர்களின் விடுதலைக்கானத் தீர்வுகளைக் காட்டுவது”**

என்பதேயாகும். அந்த வகையில் “இமையம்” கோவேறு கழுதைகள் என்ற புதினத்தைப் படைத்ததின் காரணமாக, அவரின் சமூகச் சிந்தனை “நவீனத்துவம்” (Moderation Mind) பெற்றது என்பதை நிருபிக்கிறது.

வண்ணார் என்றச் சாதியின் உட்பிரிவாகக் காணப்படும் புதிரை வண்ணார், தலித் சமூகங்களுக்குத் துணி வெளித்துத் தந்து அவர்களின் கீழ்ச்சார்ந்து வாழ்ந்திடும் சமூகம் என எட்கார்தர்சன் தன் நூலில் கூறுயுள்ளார். ஆனால் வண்ணார் சமூகத்திற்கும், புதிரை வண்ணார் சமூகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. துணி வெளுத்தல் என்ற ஒரேத் தொழிலில் மட்டும் இவர்களுக்கான

அடையாளகமாவுள்ளது. மேல்குடி வண்ணான், கீழ்க்குடி வண்ணான் என்ற பிரிவுபடியே "துணி வெளுத்தல்" தொழிலும் அமைகிறது. கதாபாத்திரங்கள் உயிரோட்டம் மிக்கதாகக் காணப்படுவது இப்புதினத்தின் சிறப்பை மேலும் அதிகரிக்கிறது. இது படைப்பாளரின் நடையென்றே கூறலாம். ஆரோக்கியம் (பெண்/தலைவி), சவுரி(ஆண்/தலைவன்) ஆகியக் கதாபாத்திரங்கள் உயிருள்ள மனிதர்களைப் போல மிக நேர்த்தியாகப் படைக்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு இனக்குழுவும் தனக்கென்றுத் தனித்தக் கலை அடையாளங்களையோ, மரபுகளையோப் பெற்றிருக்கும். ஒரு சிறிய வரலாறு அவர்களைச் சார்ந்து காணப்படும். ஆனால், எந்தவொரு வரலாறும் இல்லாமல் தனித்த அடையாளம் இல்லாதக் கலை, மரபுச் சார்ந்த பண்பாடுகள் ஏதும் இல்லாமல் வாழும் "அலைகுடி" சமுதாயத்தினர் என்பதைக் கதையின் போக்கில் சொல்லப்பட்டிருப்பது படைப்பாளரின் வரலாற்றுப் பின்புல அறிவைக் காட்டுகிறது.

> **"(தலைவன்) சவுரியின் அப்பனுக்கும் தெரியாதாம் இந்த ஊருக்கு வண்ணானாக வந்தது எப்படி என்று. அவன் அப்பனுக்கு வேண்டுமானால் தெரிந்திருக்கும், இந்த ஊருக்கு யார் சுவீகார வண்ணனாக வந்தது, ஊர்க்காரர்கள் எப்படி வந்து, என்ன சொல்லி அழைத்து வந்தார்கள் என்பது தெரிந்திருக்கலாம். இந்த ஊருக்கு வண்ணான் இல்லாமல் இருந்து, தங்களுக்கு வண்ணான் தேவை என்று உணர்ந்து, ஊரில் உள்ள பெரியவர்கள் கூடிபேசி, தங்களுக்கென்று தனியான ஒரு வண்ணான் தேவை என்று யாரால், எப்பொழுது, யார் கொண்டு வரப்பட்டார்கள் என்று ஆரோக்கியத்திற்குத்(தலைவி) தெரியாது. மேரி இன்றுவரை யாரிடமும் இது குறித்து எதுவும் கேட்டதில்லை. யோசிக்கவே இல்லை. அந்த எண்ணமே வரவில்லை. ஆரோக்கியமும் சொல்லவில்லை. இது குறித்து ஆரோக்கியமே கவலைப்படவில்லை. தனக்கு சொந்த ஊர் எதுவாக இருக்க முடியும்? இந்த ஊர் அவர் பிறந்த ஊர்தான். ஆனால் ஏழு, எட்டுத் தலைமுறைகள் கொண்ட பூர்வீகமா? மேரிக்கு அழுகையே வந்து விட்டது. இவர்கள் துரத்தி விட்டால் எங்கே, எந்த ஊருக்குப் போவது? " ஊரில் எல்லாருமே மாரியாயி, முருகன், வெங்கடாசலபதி காளியம்மன் என்று சாமி கும்மிடும்போது நாம் மட்டும் ஏன்? ஏசு நாதரைக்**

**கும்பிடுகிறோம்? கிறித்தவ மதத்தைச் சார்ந்து இருப்பது ஏன்? அதுவும் வண்ணானாக? மற்றவர்களைப்போல் இந்துவாக இருந்தால் துணி வெளுக்கத் தேவையில்லை. உறவுகள் அதிகம் இருக்கும். பெண்களைத் துணிந்து ஆண்கள் யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள், சண்டை வருமென்று. நாம் ஏன் கிறித்தவ மதம், அதுவும் ரோமன் கத்தோலிக்க மதம் என்கிறார்கள் என்று இப்போதுதான் முதன் முதலாக மேரி எண்ணினாள்"[6]**

புதினத்தில் இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்த மேரி என்றக் கதைமாந்தரின் எண்ணத்தில் ஓடும் அலைகளே, இச்சமூகத்தின் வரலாற்றுப் பின்புலத்தை உணர்த்துகிறது. இது ஆசிரியரின் சமூகவியல் அறிவையும், வரலாற்று அறிவையும் வெளிப்படுத்துகிறது.

## 5.11 ஆறுமுகம் நாவல் படைப்பின் பின்புலம்:-

கோவேறு கழுதைகள் புதினத்தைப் போன்ற ஒருத்"தலித்" சமூகத்தின் பின்புலமாக "ஆறுமுகம்" புதினம் எழுதப்பட்டுள்ளது. முந்தையப் படைப்பான "கோவேறு கழுதைகள்" புதினத்தில், தலித்துகளின் கீழ் அடிமைகளாக உள்ள இனமக்களை அடையாளப்படுத்தியவர், "ஆறுமுகம்" நாவலில் "கிராமப்புற தலித் இனமக்கள் நகர்ப்புறத்திற்குத் தங்களின் வாழ்வாதாரத்தைத் தேடிச் செல்லும் போது குடும்பங்கள் எவ்வாறு சிதைவுக்கு உட்படுகிறது என்பதைப் பற்றியும், வீட்டை விட்டு ஓடிச் சென்று பாலியல் தொழிலில் தள்ளப்படும் பெண்களின் நிலை என ஒருங்கே கொண்டு "ஆறுமுகம்" புதினம் படைக்கப்பட்டுள்ளது.

தலித்துகளாகப் பிறந்தவர்கள் தாங்கள் வாழும் ஊரில், கிராமப்புறத்தில் வாழ்வதற்கான நிலையை இழக்கின்றனர். சாதியப் பாகுபாடு ஒன்றே அவர்கள் வாழ்வதற்குத் தகுதியற்றவர்கள் எனப் பறைசாற்றுகிறது. இந்தச் சாதியின் ஒடுக்குமுறைகளுக்கு ஆளானவர்கள், நகர்ப்புறம் நோக்கி நகர்வதை இன்றுவரையில் காணமுடிகிறது.

மேல்சாதியினருக்கு இணையான ஒரு வாழ்வைப் பெற்றிட விரும்புவோர் நகர்ப்புறங்களில் வந்து குடியேறும் போதும் தொழில் முறையிலானச் சிக்கல்களில் மாட்டிக்கொள்கின்றனர். படித்தக் கல்வியறிவு பெற்றவர்கள் தங்கள் சாதியின் இருப்பைக் காட்டிக் கொள்ளாமல், ஏதேனும் அலுவலகப் பணிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். படிப்பறிவற்ற ஆண், பெண்கள் வேலையின்றி, நகர்ப்புறத் தூய்மை

செய்தல், அசுத்தங்களைக் கழுவும் பணியில் சேர்தல், பொதுக் கழிப்பிடங்களில் பணி அமர்த்தப்படுதல், மருத்துவமனைகள், தொழில்மனைகள் போன்றவற்றிலும் பெருக்கி, சுத்தப்படுத்துதல் போன்றப் பணிகளைப் பெற்று வாழ்கின்றனர். கிராமப்புறத்தைவிட்டு, அடக்கு முறைக்குப்பயந்து நகர்ப்புறங்களை நோக்கிப் பயணிக்கும் குடும்பங்களின் நிலை இதுதான் என்பதை எடுத்துரைக்கும் புதினமாக "ஆறுமுகம்" விளங்குகின்றது.

ஆசிரியரின் நவீனத்துவமான அணுகுமுறை, தலித்துகளின் வரலாற்று ரீதியான அணுகுமுறை போன்றவை இந்நாவல் மூலம் தெரிகிறது. ஆசிரியரின் நோக்கமே இம்மனிதர்களின் வாழ்வு எவ்வாறு ஏமாற்றத்துடன் காணப்படுகிறது என்பதை எடுத்துரைப்பதாகும். இது படைப்பாளியின் "தலித்" மக்களின் மீதான சமூகச் சிந்தனை, பணிவு, நேசம், ஆர்வம் எனக் கூறலாம்.

அதேபோல், வீட்டைவிட்டு ஓடிவருவோர். இவர்கள் தங்களின் வாழ்வாதாரமானக் குடும்ப நிலையை உதறித் தள்ளித் துணிந்துத் தஞ்சம் புகுவது "நகர்ப்புறமே" ஆகும்.

வீட்டை விட்டு ஓடிவருவதற்கானச் சூழல், இதனை "ஆறுமுகம்" புதினத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆறுமுகம், தனபாக்கியம், பாக்கியம், சின்னப்பொண்ணு, தருமமூர்த்தி, வசந்தா போன்றக் கதாபாத்திரங்கள் அனைத்தும் வீட்டை விட்டு ஓடிவந்தவர்களேயாவர்.

### 5.12 தன்னிலை கதைமாந்தர்கள்:

இதில் தனபாக்கியம், ஆறுமுகம் தாய் - மகன் உறவில் உள்ளவர்கள். தனபாக்கியத்தின் கள்ள உறவினை நேரில் கண்டவுடன் "ஆறுமுகம்" (சிறிய பையன்) ஏமாற்றம் காரணமாக வீட்டை விட்டு ஓடிவிடுகிறான். தனபாக்கியம் தன் மகனைத் தேடி அலைந்து பின்பு, பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

சின்னப்பொண்ணு, பாக்கியம், வசந்தா ஆகிய பெண்பாத்திரங்களும் மாமனார் மாமியார், கணவன், உறவினர்கள் என இவர்களிடம் சண்டையிட்டு, நகர்ப்புறத்திற்கு (பாண்டிச்சேரி) ஓடிவந்தவர்களாகக் காட்டப்பட்டுள்ளது.

தருமமூர்த்தி - தன் மனைவி வேறொருவனுடன் ஓடிப் போனதினால், நகர்ப்புறம் நோக்கிப் பயணித்து ரிக்ஷா ஓட்டும் தொழிலிலும், பாலியல் தரகர் தொழிலிலும் ஈடுபடுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

ஆகமொத்தத்தில், வீட்டை விட்டு ஓடிப் போனவர்கள் என்ன? ஆனார்கள் என்ற கேள்வியையும், கேள்விக்கானப் பதிலையும் இதனுள் காட்டப்பட்டுள்ளது.

"ஆறுமுகம்" புதினத்தில் தன்னிலைக் கதை மாந்தர்களாக ஆறுமுகம், தனபாக்கியம், சின்னப்பொண்ணு, பாக்கியம் போன்றோர்கள் கிராமப்புற "தலித்" மக்களாகக் காட்டப்பட்டுள்ளது. ஓடிப்போவது என்ற நிலையை அடைபவர்களின் எண்ணிக்கை "தலித்" மக்களைச் சாரும். "வசந்தா" போன்ற (நாயுடு குடும்பம்) ஓரிருவர் மட்டுமே வீட்டைவிட்டுத் துரத்துதல், வீட்டைவிட்டு ஓடி வருதல் போன்றவைகளுக்கு ஆளாகின்றனர் எனப் புதினத்தின் வழியேக் கூறியிருப்பது ஆசிரியின் சமூகவியல் பார்வையைக் காட்டுகிறது.

இவ்வாறு கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறத்திற்கு விரட்டப்பட்டவர்களோ, ஓடி வருபவர்களோ, குடிபெயர்பவர்களோ இவர்கள் அனைவரும் "தலித்" மக்களே என்பதும், நகர்ப்புறங்களில் பிச்சைக்காரர்களாக, பாலியல்த்தரகர் தொழில் புரிபவர்களாக, பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்களாக உள்ள இவர்களை "விளிம்பு நிலை மக்கள்" என அடையாளப்படுத்தி, இவர்களின் வாழ்வின் சமூகப்பின்புலம், போன்றவற்றைக் கதைக்குரியக் களமாகவும், பாத்திரங்களாகவும் உலவவிட்டிருப்பது "இமையத்தின்" தனித்தன்மையைக் காட்டுவதுடன், அவரது "விளிம்பு நிலை மக்களின்" மீதானப் பார்வையையும் வெளிப்படுத்துகிறது.

"செடல்" புதினமும் "தலித்" மக்களின் மீதான வேறொருப் பார்வையைப் பதிய வைக்கிறது. தலித்துகளைக் கூத்தாடிகளாகத் தேவதாசிகளாகக் காட்டப்பட்டிருப்பது புதுமை. கூத்து நிகழ்த்தும் கலைஞர்களுக்கான வாழ்க்கைச் சிக்கல்கள், தேவதாசிகளான "பொட்டு கட்டி" விடப்பட்டவர்களின் வாழ்க்கை அந்தரங்கள், இவர்களின் குடும்பங்கள் என மூன்று நிலையில் "செடல்" புதினம் அமைந்துள்ளது.

கோவேறு கழுதைகள், ஆறுமுகம், செடல் ஆகிய மூன்று புதினங்களும் தலித் - விளிம்பு நிலை மக்களைச் சார்ந்தது என்பதால் இமையம் என்ற படைப்பாளரின் நோக்கம், "விளிம்பு நிலை மக்களை" இனம் கண்டு வெளியுலகிற்கு அவரது வாழ்க்கைச் சிக்கல்களை வெளிக்கொணருதல்/தெரியப்படுத்தல் என்பதைக் கூறலாம்.

"இமையம்" என்றப் படைப்பாளர் தலித் மக்கள் சார்ந்த இலக்கியங்கள் படைக்கும் சீரியச் சமூகச் சிந்தனையாளர் எனக் கூறுவதில் தவறேதேனும் இருக்காது என நம்பப்படுகிறது.

## 5.13 சிறுகதைகள்:-

சிறுகதைகளின் வழியே "தலித்" இனமக்களின் அன்றாட இன்னல்கள் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவரது சிறுகதைகளுள் பெரும்பான்மையானச் சிறுகதைகள் "தலித்" குடும்பங்களைப் பற்றியதாக இருக்கிறது.

காதல் கலப்புத் திருமணத்தை ஆதரிக்காத குடும்பத்தை "வீடியோ மாரியம்மன்" - சிறுகதையிலும், தலித் பெண்ணை ஏமாற்றி கர்ப்பம் தரித்தபின் அவளைக் கொன்றுவிடுவது "சத்தியக்கட்டு" என்ற சிறுகதையிலும், கிராமப்புற விதவைத் தாய் "தலித்" பெண்ணின் நிலை "நிஜமும் பொய்யும்" என்ற சிறுகதையிலும், அம்மா, பாசத்தை "அம்மா" சிறுகதையிலும் காண்பித்து தலித் - விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரச் சூழலைப் பிறர்/மேல் சாதியினர்/அதிகார வர்க்கத்தினர் புரிந்து கொள்ளும்படி செய்துள்ளனர்.

## 5.14 இமையம் - படைப்பாளர், தலித் மக்களை கதைக்குரியப் பொருளாகக் கொண்டதற்குக் காரணங்கள்:-

இமையம் என்ற நவீனப் படைப்பாளரான இவர், தன்னுடையப் படைப்புகளில் பெரும்பான்மையானவையாகத் "தலித்" மக்களையே முன்னிறுத்தியுள்ளார். இவ்வாறு தன் படைப்புகளின் தலித் - விளிம்பு நிலைமக்களைக் கதைக்குரியவர்களாக மாற்றுவதற்கு சிலக் காரணங்களைப் பட்டியலிட்டுக் காட்டப்படுகிறது.

1. தலித் மக்களின் வாழ்வாதாரச் சூழலை, மேல்தட்டு மக்களும், அறிந்து கொள்ளச் செய்வது.

2. தலித் - இன மக்கள் சாதிப் பாகுபாட்டில் கீழேத் தள்ளப்பட்டிருந்தாலும், இவர்களுக்கான பண்பாட்டு, கலாச்சாரங்கள் ஆகியவற்றை வெளிக் கொணரச் செய்தல்.

3. விளிம்பு நிலையில் வாழும் "தலித்" இன மக்களை அடையாளப்படுத்துதல்.

4. இவர்களின் (தலித்) வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைத்து பிறர் புரிந்துகொளச் செய்தல்.

5. ஒடுக்குமுறைகளுக்கும், வன்முறைகளுக்கும் ஆளாக்கப்பட்டு வாழ்வினை இழந்து நிற்கும் "தலித்" மக்களின் வாழ்வியலின் துன்பங்களை ஆராய்தல்.

6. சாதியப் படிநிலையில் கீழானவர்களாக, தீண்டப்படாதவர்களாக இருந்த போதினும், இவர்களுக்கெனத் தனித்த பண்பாட்டுக் கூறுகளை வெளிக் கொணருதல்.

7. சாதிய பாகுபாடு பார்க்கும் சமூகம், பாலியல் எண்ணத்தில் சாதி பார்ப்பதில்லை என்றச் சிந்தனைக் கருத்தை வெளிப்படுத்துதல், எடுத்துரைத்தல்.

8. கணவனை இழந்தத் தலித் பெண்களின் நிலை.

9. தலித் - சமூகத்தில் கீழானவர்களாக இருப்பினும், இவர்களிடத்தும் "சாதி" என்றப் பாகுபாடு உள்ளது என்பதை வலியுறுத்துதல்.

10. பொருளாதார ஏற்றத் தாழ்வில் சுரண்டலுக்கு ஆளாகும் தலித் குடும்பங்கள்.

11. தொழில் முறையில் பண்ணை அடிமைகளாக, தினக் கூலிகளாக வேலை செய்து, மேட்டுக்குடிகளை நம்பி வாழும் நிலையை எடுத்துரைத்தல்.

12. கிராமப்புறம், நகர்ப்புறம் ஆகியவற்றில் வாழ்க்கையின் நிலைமைகள்.

13. ஆண்டான், அடிமை முறை இன்றும் கிராமப்புறங்களில் உண்டு என்பதை வெளிக் கொணருதல்.

14. கடவுள், சமயம், சாதி ஆகியவற்றின் போர்வையில் இருந்து கொண்டு "தலித்" மக்களை ஏமாற்றும் சமூக எதிரிகளை இனங்காணுதல்.

15. மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிந்துப் போக, இவை வெளிப்படும் விதம்.

16. கலை, பண்பாடு, போன்றவற்றைத் தனித்தன்மையோடு கொண்டு இயங்கும் "தலித்" அல்லது விளிம்பு நிலை மக்கள் இவர்களைப் புரிந்து கொள்ளச் செய்வது.

17. சாதிய ஏற்றத்தாழ்வுகளைக் களையப் படைப்புகள் மூலம் முற்படுதல்.

மேற்கூறப்பட்ட இந்தச் சீரியச் சிந்தனைகள் யாவும் "இமையம்" என்ற படைப்பாளர் "தலித்" மக்களைச் சார்ந்து இலக்கியங்கள் படைக்கக் காரணங்களாக எடுத்துக் கொள்ளலாம்.

## 5.15 இமையம்: படைப்பாளரின் உத்திகள்:-

சிறுகதைகள், புதினங்கள் ஆகியவற்றைப் படைக்கும் போது ஆசிரியர்கள் சில இலக்கிய உத்திகளைக் கையாளுவது என்பது தவிர்க்க இயலாதது எனலாம். படைப்பாளரின் சிந்தனைகளுக்கேற்ப உரையாடல்களையும், அவற்றை வலுசேர்க்கும் விதமாகக் கதையின் போக்கில், உதாரணக் கதைகளோ, வருணனைகளையோ, மரபுத் தொடர்களையோப் பயன்படுத்துவது நடையாகக் கூறலாம். நனவோடை ஆசிரியரேக் கதைக் கூறுவதுக் கதை மாந்தர்களே பேசிவதைப்போல அமைப்பது ஆகியவை உத்திகளைக் கூறலாம். நடை என்பதில் உத்திகளைச் சேர்க்க முடியாது. ஆனால் உத்திகளில் நடையைச் சேர்க்கலாம். நடை(Style) என்பது கதைக்கூறும் போது அமையும் எழுத்து அல்லது சொல் வகையைக் குறிக்கும். ஒரு ஆசிரியர் ஒரு கதைமாந்தரைப் பற்றிக் கூறும்போது "அவன் வந்தான், சென்றான்" என்பதும், "வந்தார்கள்/சென்றார்கள்" என்பது போலவும் அமையும். அதே வேளையில் சொற்களில் பிறமொழிச் சொற்களைக் கலத்தல், முழுவதும் இலக்கியநடை, பேச்சு வழக்கில் அமைத்தல் போன்றவற்றையும் நடை, உத்தி ஆகிய இரண்டு வகைகளில் கூறலாம்.

"இமையம்" என்றப் படைப்பாளர், தன் சிறுகதைகளில், புதினங்களில் இத்தகையதாக உத்தியைப் பயன்படுத்தி கதை அமைந்திருப்பதை அவரின் இலக்கிய ஆளுமைப் பண்பைக் குறிப்பதாகக் கூறலாம்.

**"ஏன் சோறு திங்கல?"**

**"வாண்டாம் தம்பி. நீ நிறையாத் தின்னியா?"**

**ஓ! வயிறுமுட்ட சாப்பட்டன். வவுறப் பாத்தாத் தெரியல, திம்னு இருக்கு."**

(கோ.க.பக்-9)

போன்றப் பேச்சு வழக்கிலுள்ள உரையாடல்களை இமையம் பயன்படுத்தியுள்ளார். இவரது சிறுகதைகள், புதினங்கள் ஆகியவற்றில் மக்களின் கிராமம் சார்ந்த இயல்பானப் பேச்சு வழக்கினைக் கொண்டு உரையாடல்கள் அமைத்து, கதை நிகழ்வுகளை நகர்த்தியிருப்பதைக் காணலாம். இம்மாதிரியான இலக்கியங்கள் "நவீனப்போக்கு" என்ற அளவிலும் குறிப்பிடப்படும். கடலூர், திட்டக்குடி, விருதாச்சலம், விழுப்புரம், பாண்டிச்சேரி போன்ற தமிழகத்தின் பகுதியில் பேசும் பேச்சுக்களே இவரது படைப்புகளில் ஆக்கிரமத்திருக்கும்.

**"தோப்புக்கு ஏன் வல்ல?"**

**"வரல இப்ப அதுக்கென்ன?"**

**"என்னா செஞ்ச?"**

**"ஹூம். தெருவுல மண்ணுக் கூட்டி விளையாண்டுக்கிட்டு இருந்தான்"**

**"உனக்கு சூத்தல பீ முட்டுறத, நெணம் முட்டுதுன்னு நினச்சிகிட்டு இருக்க. பின்னால எல்லாம் தெரியும்."**

**"பாடையில போறவளே! நீ நல்லா இருப்பியா? நாசமாப்போவ"**

**"என்னெப் பாத்து இப்படிக் கேக்கிறியே! நீ மல்லாந்து போவ.**

**மக்குன்னு போவ"** (கோ.க.பக்-135)

போன்ற உரையாடல்கள் மிகச்சாதாரண வட்டார வழக்கில் இருப்பது. இவ்வாறு மக்களின் அன்றாடச் சொல் வழக்குகள் புதினம் முழுவதும் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவற்றை எதார்த்த நடை எனபர். மக்களின் எதார்த்தமானத் தான்தோன்றித்தனமான பேச்சுக்கள் புதினம், சிறுகதை போன்றவற்றில் அமைத்துக் காட்டுவதுப் படைப்பாளரின் தனி வகை உத்தி எனக் கூறலாம்.

**"சனங்க மின்னமாரி இல்ல ஆண்டவரே!"**

**"நிஜமாவா?"**

**"ஆமாங்க. எதுக்கெடுத்தாலும் சண்டக்கி வராங்க. தவசமும் மின்னமாரி கொடுக்கிறதில்ல. படியும் மோசமா இருக்கு. காரியத்திலியும் வண்ணானயே மறந்துடுறாங்க. பழய வயக்கமெல்லாம் இல்லாமப் பூடிச்சி ஆண்டவரே. ராத்திரிக்குக் குண்டான் நெறய மாட்டங்குது. புள்ளெ குட்டிய வச்சிக்கிட்டுத் தவுசு பண்றன். காட்டுல வனவாசம் போன கதையா இருக்கு ஆண்டவரே" (கோ.க.பக்-14)**

**போன்ற உரையாடல்களும்,**

**"தோசப் பரிகாரம் ஒண்ணுமில்லிங்களா?"**

**"தெய்வத்துக்கு என்னடா தோசப் பரிகாரம்? முடுவச் சொல்லு"**

**"சாமிவுளுக்கு எதிரா நான் என்னாத்த சாமி சொல்லப் போறன்?**

**பல ஊருக்காரங்க கூடியிருக்கிற சபயில நாலு வாத்த**

**என்னால பேச முடியுங்களா!"**

**.................................................................................................**

**நம்ம ஊரு வயக்கமென்னடா? யே, அந்தப் பண்டாரப்**

**பய எங்கடா?"**

**"இந்தா இருக்கனுங்க சாமியோவ்"** (செடல் - பக் -1)

போன்ற உரையாடல்களும், கிராமங்களில் இன்றும் பேசுவதைக் காணமுடிகிறது.

**சூழலுக்கேற்ற உரையாடல் அமைத்தல்:-**

**"இங்க வாங்க."**

**"எவ்வளவு?"**

**"முப்பது!**

**"இருபது இல்லியா?"**

**"அதுக்கு இங்க ஒருத்தரும் இல்ல. ஒன்னோட இஷ்டம்போல இருக்கணும்ன்னா ரூமுக்குள்ள நீ இஷ்டப்பட்டத காப்பிக்கு தரணும். ரூம் வாடவ ரெண்டு ரூவா. கட்டெ கொண்டாந்திருக்கியா? இல்லான்னா அதுக்கு ஒரு ரூவா"**

**"சரிவா"**

**"எடு"**

**"முடிச்சிட்டுத் தரன்!"**

**"அதெல்லாம் முடியாது. மொதல்ல எடு!**

**"படுக்கிறதுக்குள்ளெ நேரமாச்சின்னு கத்தினா எதுவும் தரமாட்டன்"**

**"சட்டய கழட்டணும்ன்னா மேல பத்து எடு" (ஆறுமுகம் - பக் -90)**

**போன்ற உரையாடல்கள்,**

**"நூறு"**

**"அம்பது மட்டும் ஊத்து"**

**"அண்ணே இங்க கொடு"**

**"நூறு போடு"**

**"மொதல்ல எனக்கு கொடு"**

**"சில்லரயதா"**

**"எம்மாம் நேரந்தான் நிக்குறது? சீக்கிரம் கொடு முதல்ல நோட்ட வாங்கு"**

**"தம்ரை இப்படிக்கொடு"** (ஆறுமுகம் -பக்-154)

போன்ற உரையாடல்களும் கதையின் சூழலுக்கேற்ப அமைந்திருப்பதைக் காணலாம்.

**"சாமி என்னிக்குமே சாவப் போறதில்லெ. ஓம் மவளும்**

**தாலியறுக்கப் போறதில்லெ" (செடல் - பக் -1)**

**"அந்த காலத்துல வெள்ளாயெனா இருந்தவனெல்லாம்**

**இப்ப சக்கிலியாயிட்டான் சக்கிலியா, பறயனா**

**இறந்தவனெல்லாம் இப்ப வெள்ளயெனா ஆயிட்டானா?"** (செடல் -பக்-1)

**"சீலயத் தூக்க மாட்டான், புள்ளெ மட்டும் வேணும்ன்னாளாம் ஒருத்தி"** (செடல், பக்-12)

**"எட்டாம் உடுப்புல இருந்துட்டா அவன் மேங்கொலமா ஆயிட முடியுமா?"**

**"கயிட்டுன செருப்பத் தூக்க முடியாத பயல்லாம்**

**ராசா ஆவப் பாத்தா நடக்குற காரியமா?"**(செடல், பக்-55)

**"ஆகாயத்துல மாப்ள, அந்தரத்துல பொண்ணு"**

**தாய் மாமன் இல்லாததால தாலி கட்ட தடங்கலா**

**இருக்குங்கிற மாரி"** (செடல்,பக் -57)

**"கண்ணுல கேட்டான், கம்பிடிச்சிப் போட்டான்"** (செடல்,பக்-89)

**"வண்ணான் வாந்தி எடுத்த இடம் மாதிரி"** (செடல், பக்-90)

**“புளிய மரத்துல கட்டிவச்ச பேயி மாதிரி”** (செடல், பக்-107)

**“அருளு கெட்டுப் போயி ஆட்டம் ஆட வந்துட்டாப்ல நான்**

**கூத்தாடிப் பயலாயிடுவனா? உப்புக்கல்லு பெறாத பயலுவோ”**

(செடல், பக்-154)

**“வண்ணான் பின்னால சிலயப் போட்டுப்பிட்டு கொக்குப்**

**பின்னால போயி தேடுன கதெயா இருக்கு”** (செடல், பக் -204)

**“தேங்காயப் பொறந்தாலும் முக்கண் உடயவரப் பொறக்கணும்”** (செடல், பக்-217)

**“ஆடுன காலு சும்மா இருன்னா இருக்குமா? கூத்து ஆசயும்**

**கூத்தியா ஆசயும் போன்னாலும் போவுமா?”**(செடல்,பக்-216)

**“பச்சத் தேவடியா அச்சில்லாத தேர் ஒட்டுவா”** (செடல், பக்-216)

“சட்டியில சோறுமில்லெ, பாயில தூக்கமுமில்லங்கிற” (செடல், பக்-216)

“பத்துத் தாயி இருந்தாலும் பெத்தாயப்போல ஆவுமா?” (செடல், பக்-225)

**“வளய விக்கிறவன் பொண்டாட்டி ஊருக்கெல்லாம வப்பாட்டி”** (செடல்,பக்-227)

**“ஆளனில்லா மங்கையருக்கு அழகுண்டா”** (செடல், பக்-227)

**“மனுச வாயிவும் மசுரு வாயிவும் ஒண்ணுதான். துலயில**

**இருக்கமட்டும்தான் மசுருக்கு மருவாத, காத்து**

**இருக்க மட்டும்தான் ஒடம்புக்கு கருவாத”** (செடல், பக்-227)

**“மாட்டுக்கு மாடுதான் நக்கிக் கொடுக்கும்பாங்க”** (செடல், பக்-232)

**“ஆதியிலிருந்து வந்தது பாதியில போவுமா?”** (செடல், பக்-237)

**“வக தெரியாம வரப்போட வெடிப்புல கால வுட்ட கதெயா”** (செடல், பக்-237)

**“கொம்பு ஒடிஞ்ச மாட்டெ பத்தியும், முட்டப் போடாத பொட்டக்**

**கோயியப் பத்தியும் சொற்றதுக்கு என்னா இருக்கு!** (செடல், பக்-239)

**“காத்தடிச்சாப் போச்சு கப்பல்காரன் பொயப்பு”**

**அடமய பெயிஞ்சாப் போச்சி ஆட்டக்காரன் பொய்ப்பு"** (செடல், பக்-242)

**"தாகமுள்ள மச்சான் தங்கச்சிய கூப்பிட்டானாம், அக்கறையோட வந்து அக்கா நின்னாங்கற கதயா"** (ஆறுமுகம் - 77)

**"இனிமே என்ன யாரு அரிசின்னு அள்ளிப் பாக்கப் போறாங்க, உமின்னு ஊதிப்பாக்கப் போறாங்க? பன மரத்துல போயி நெயலுக்கு ஒதுங்கன கதயா"** (ஆறுமுகம் - 74)

**"இருந்த இருப்ப ஏகாலி அறிவான், வாய்ந்த வளப்பத்த வண்ணன் அறிவான்"** (ஆறுமுகம் - 75)

**"கூலிக்கு ஏர் ஓட்டறவனுக்கு சூரியன் மேல கண்ணு: பாய் விரிக்கிற தேவடியாளுக்கு பணத்து மேல கண்ணு"** (ஆறுமுகம் - 107)

**"ஆம்பள மொலயப் பார்ப்பான், பொட்டச்சி மடியப் பார்ப்பாங்கறது"** (ஆறுமுகம் - 107)

**"மன்னாரு இன்னாரு, மாட மாளிக இன்னாரு, அரசான இன்னாரு, ஆக்கின இன்னாரு, ஆண்டாண்டு காலம் ஆயுளுதான் இன்னாரு, ஆறடி மண்ணுக்குள்ள அடங்கித்தான் போனாரு"** (ஆறுமுகம் - 151)

**"வராத வாயிவு வந்துதான் வாசப்படியில நிக்குதே!"** (ஆறுமுகம் - 178)

**"சூத்த கழுவி விட்டா ஒடம்புல பீ இல்லன்னு ஆயிடுமா?"** (ஆறுமுகம் - 189)

**"தின்ன ருசி கண்ட நாக்கும், படுத்து சொகம் கண்ட ஒடம்பும் "சும்ம இரு"ன்னாலும் இருக்காது"** (ஆறுமுகம் - 203)

**"ஒரு எருக்காரன் உயிது கெட்டான். ரெண்டு ஏருக்காரன் நிறுத்திக் கெட்டாம்கிற கதையா இருக்கு"** (கோ.க.பக்-79)

**"பொட்டக் கோயி கூவியா விடியப் போறது?"** (கோ.க.பக்-121)

**"வண்ணான் பொழப்பு, சீமான் பொழப்பு"** (கோ.க,பக்-155)

**"வாயுரப் புள்ளய தாயாரே கொடுத்தாப்ல காத்து வந்து கொடுத்துப் புடுச்சி"**

(வீ.மா.பக்-195)

**"ஒடஞ்ச சட்டி ஒலக்கி என்னிக்கு ஒதவியிருக்கு"** (வீ.மா, பக்-203)

**"திருட்டுக்கு ஏது இருட்டு"** (வீ.மா,பக்-210)

மேல்குறிப்பிட்ட அனைத்து உரையாடல்களும் வட்டார வழக்கில் இருப்பதைக் காணலாம். இது கதையைக் கட்டமைக்கப் பலப்படுத்தத் துணைநிற்பதுடன், கதை மாந்தர்களின் உண்மையானக் குணநலன்களை அறிந்து கொள்ளத் துணைநிற்கிறது எனலாம்.

எனவே இமையம், தன் படைப்புகளில் மக்கள் பேசிவரும் மரபுத் தொடர்களையும், அந்தந்த வட்டாரத்தில் உள்ள சொற்றொடர் வழக்குகளையும் பயன்படுத்தி எழுதி வருவது அவரின் தனித்தன்மை எனலாம்.

மரபுத் தொடர்களில் இடம் பெறும் கேவலமான சொல்லாடல்கள் முகத்தை சுழிக்கவைத்தாலும், உண்மையில் மனிதர்கள் அனைவரிடமும் இத்தகையான குணநலன்கள் இருப்பதை யாராலும் மறுக்கமுடியாது. நாம் அனைவரும் ஏதேனும் ஒரு கெட்ட வார்த்தைப் பிரயோகிக்கும் மனிதர்களாவே இருக்கிறோம். வீட்டில் , பணிபுரியும ் அலுவலகம், விளையாட்டு என அனைத்திலும் வசைச் சொற்களைப் பயன்படுத்த நாம் பேசுவதை நினைவில் கொள்ளவேண்டும்.

இம்மாதிரியான சொற்கள் பெரும்பான்மையாகத் தலித்துகள் அல்லது விளிம்புநிலை மக்களிடையேப் புழங்கி வருகிறது என்பதானப் பதிவுகள் மட்டும் ஆசிரியரின் சாதி அரசியலைக் காட்டுகிறது எனலாம். ஆதலால் கதை சொல்வதற்கு, இதனை ஏற்ற ஒரு கவுரு போலப் பயன்படுத்திக் கதையை வாசகர்களுக்குப் புரிய வைப்பது என்பதேப் படைப்பாளரின் வெற்றி எனலாம்.

மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பேச்சு வழக்குகளைப் புதினம், சிறுகதைப் போன்றவற்றில் பயன்படுத்திச் சொல்லப்பட்டிருப்பது ஒரு வகை "புதிது" எனலாம். இலக்கியப் படைப்பாளர்கள் தங்களுக்குத் தேவையானத் தகுதிகளில் இதனை ஒன்றாகக் கருதுவர். நாட்டுப்புற மக்களை மையப்படுத்திப் படைப்புகள் அமையும் போது, அவர்களுக்கான நடையாக அது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் படிப்போரின் மனதில் சூழல் என்பது புரிந்துக்கொள்ள முடியும். கதைகளுக்கேற்ப அதந்தந்தச் வட்டாரசொற்வழக்குகளைப் பயன்படுத்துவது என்பது படைப்பாளரின் புலமையை அறிந்துள்ளச் செய்கிறது எனலாம்.

## 5.16 இமையம் படைப்புகள் தலித்-களுக்கு எதிரானது:-

இமையம் என்றப் படைப்பாளர், தன்னுடையப் படைப்புகள் பெரும்பான்மையானதாகத் "தலித்" மக்களைச் சார்ந்தேப் படைத்துள்ளனர். இது

படைப்பாளரின் தனித்துவம் என்பதோடு அவருக்கு "தலித்" மக்களின் மீதுள்ள அல்லது "தலித்" மக்களின் மீதுள்ள ஆழ்ந்தப் புரிதலையே அது காட்டுகிறது என கண்டோம். அதே போல், இமையம் என்றப் படைப்பாளர், தன் படைப்புகளின் மூலம் "தலித்" மக்களுக்கு எதிரான ஒருப் போக்கையும் கடைபிடித்து வருவதை இங்கு கூறியே ஆக வேண்டும்.

தற்காலத்தில் தலித் இலக்கியம் என்ற ஒருவகை வளர்ந்து வரும் சூழலில், தலித் அல்லாதோர் படைக்கும் படைப்புகள் சில, தலித் மக்களுக்கு ஆதரவாகவும், எதிரானதாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

தலித்தியம், குடும்பம், பெண்ணியம், நவீனத்துவம், பின்னை நவீனத்துவம் போன்றவைகளின் பின்னணியில் படைப்பாளர்கள் சமூகத்திலுள்ள மக்களின் அன்றாட வாழ்வின் சிக்கல்களை வெளியுலகிற்கு கொணரும் தன்மை, இவற்றின் மூலம் காணமுடிகிறது. தலித் சார்ந்த படைப்புகள் என்று பார்க்கும் போது, தலித் மக்களின் வாழ்வியலை உள்ளது உள்ளவாறு படைக்கும் போது, சில, பல கருத்துக்கள், சிந்தனைகள் ஏற்றுக் கொள்ள நிலையும் அவ்வகையானப் படைப்புகளில் காணமுடிகிறது.

அடித்தட்டு மக்களைச் சார்ந்த படைப்புகளில் "தலித்" மக்களின் வாழ்வைக் காணமுடிகிறது என்றால் அது படைப்பாளருக்கு கிடைத்த வெற்றி எனலாம் அல்லது படைப்பாளரின் சார்பு நிலை எனலாம். ஆனால் அம்மாதிரியான படைப்புகள் படைக்கும் போது, அவற்றில் தலித் மக்களைப் பற்றியப் பதிவுகள் ஒரு தனித்த அடையாளத்தைப் பெற்று விடுகிறது. தலித்துகள் என்றாலே இந்த படைப்புகள் வழியே காணலாகும் மக்களைப் போன்றவர்கள் என்ற சிந்தனைகளுக்கு இட்டுச் சென்று விடுகிறது.

சாதியை எதிர்த்து, போராடி, தங்கள் வாழ்க்கையை பலவித சிரமங்கள், ஏமாற்றங்கள், கவலைகள், ஏக்கங்கள் என்பவனவற்றோடு போராடும் நிலையிலேயே இன்றும் "தலித்" மக்கள் உள்ளனர். சாதியிலிருந்து முழுமையான விடுதலை என்பது இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

நன்கு படித்த மருத்துவர் (M.B.B.S. M.S.M.I), தொழில் நுட்ப வல்லுநர் (B.E. M.E. M.Tech) போன்றவர்களும் சாதியைச் சார்ந்து இயங்குவதும், படித்த நம் அனைவரிடமும் இன்னும் அந்த வருணப்பாகுபாடு உள்ளதையும், அதனால் சாதியைச் சார்ந்தே நாம் அனைவரும் இயங்கி வருகிறோம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

தலித் மக்களுக்கான அழுத்தங்கள், ஒதுக்கல்கள், தீண்டாமைகள் போன்றவைகள் நவீனக் காலத்திற்கு ஏற்ற வகையில் மாறியிருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அதனால், சாதியக் கொடுமைகள் இன்றும் நகர்ப்புறம், கிராமப்புறம் என இருவேறு தளங்களில் நின்று, மக்களை வழிநடத்துவதை காணும்போது, அதற்கானத் தீர்வுகளாக, நவீனத்துவம் சார்ந்த இலக்கியப் படைப்பாளர்கள் தங்களின் மேலான எதிர்ப்பை, இலக்கியங்கள் மூலம் காண்பிப்பதையே நவீனப் போக்கு என்கிறோம். முன்பு இல்லாத ஒரு சிறிய அளவிற்கு "தலித்" மக்கள் முன்னேற்றம் என்ற அளவினை குறிப்பிட்ட சதவீதத்தினர் அடைந்துள்ளனர். ஆனால் அது எண்ணிக்கையில் மிகவும் சொற்பமே எனலாம். ஆகவேத் தலித்மக்களுக்கான முன்னேற்றம் என்ற பெயரில், தலித் மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி சிறுகதைகளோ, புதினங்களோ எழுதும் போது அது மக்களிடையே ஒரு மாற்றத்தை அல்லது புரிதலை ஏற்படுத்துகிற அதே வேளையில், அந்தப் படைப்புகள், "தலித்" மக்களின் கலாச்சாரம், பண்பாட்டுத் தளங்களில் ஒரு காயத்தை(வடு) உண்டாக்குகிறது என்பதையும் மறந்து விட முடியாது.

இமையம் படைப்பாளரின் மூன்று புதினங்களான செடல், ஆறுமுகம், கோவேறு கழுதைகள் போன்றவற்றில் தலித் மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தியிருப்பகைக் காணலாம்.

இந்த மூன்று புதினங்கள் மூலம் "இமையம்" வெற்றிப் பெற்றுள்ளார். ஆனால் அது அம்மக்களின் விடுதலைக்கானத் தீர்வாக இல்லை, மாறாகத் "தலித்" மக்களுக்கு எதிரானப் போக்காகவே! இருக்கிறது என ராஜ் கௌதமன் போன்றோர் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

"தலித் மக்களுக்கு எதிரான அடையாளங்கள் என்ற ஒவ்வாமை, **"கோவேறு கழுதைகள்" நாவலிலேயே தொடங்கி விட்டது.**"[7] என ராஜ்கௌதமன் அவர்கள் கூறும் கருத்தின் படிக் கோவேறு கழுதைகள் என்றப் புதினத்தில், தலித் மக்களின் வாழ்வியல் பதிவுகளை மிகக் கேவலமாகப் படம் பிடித்து காட்டியிருப்பார். இந்த புதினத்தை வாசிக்கிற ஒவ்வொருவருக்கும் "தலித்" மக்களின் மீதான அனுதாபத்தை விட தலித் மக்களின் மீதான எதிரான சிந்தனையே அதிகமாகத் தோன்றும் படிக்கதையின் நிகழ்வுகள் அமைந்திருக்கும். தலித் மக்களின் அடையாளங்களாக உரையாடல்கள் மூலம் காண்பிக்கிறார்.

தூக்கிக் கொண்டிருக்கும் சவுரியை, ராமசாமி என்ற ஒருவர் வந்து எழுப்புகிறார். தன்னுடைய அம்மா இறந்து விட்டதாகவும், அதற்கானச் சாவுச் சடங்குகளை (கீழானவை மட்டும்) செய்யச் சொல்லி சவுரியை அழைப்பதற்கு வீட்டிற்கு வருகிறார். அப்பொழுது ராமசாமி பேசும் பேச்சுக்கள் ஆண்டான், அடிமை என்ற எண்ணத்தை மறப்பதற்குப் பதிலாக, மீண்டும் நினைவு படுத்துவது மாதிரி உள்ளதைக் காணலாம்.

**"முண்டப் பயல, தூக்கம் போவலியா? ஒரு கொரல்ல "ஒனு" எழுந்திருக்க வாண்டாமா? வயசான காலத்துல இப்படியாடா தூக்கம் வரும்?"**- என்ற இராமசாமியியன் கேள்விக்கு **"கட்ட செத்த அசந்து போச்சீங்க சாமி. தப்பிதமாக் கொள்ளாதீங்க சாமி!"**[8] என சவுரி பதில் கூறுவதில், இந்த ஆண்டாள் அடிமை நிலைப்பாடு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும் அந்த உரையாடலில்,

> **"மனசுல கவல இருந்தா மனுசனுக்குத் தூக்கம் வருமாடா? தூக்கம்தான் வருமா? முண்டப் பயல, வாடா!"**
>
> **"சாமி"**
>
> **"என்னடா நிக்கற?"**
>
> **"கெய்வி போய்டிச்சி. வய்யீ அனுப்பணும். பெறவு, வேலவித்தி, காரியம்னு இருக்கு. ஒரு பயலும் ஆப்புடல. பெறவு நானே வந்துட்டன்.** [9]

போன்ற உரையாடல்கள் அதனை மேலும் நினைவுப்படுத்திப் பலப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

இதுபோல தலித் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் போது அந்த படைப்புகளில் அவர்களின் வாழ்வைமீதான எதிர்மறைப் புரிதலை இதுபோன்ற உரையாடல்கள் வலுப்படுத்திவிடுகிறது.

சாதிய விடுதலை, பண்பாட்டுக் கலாச்சார விடுதலை என முன்னோக்கி "தலித்தியம்" நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில் இது போன்றக் கதையமைப்பும், கதைக்கான உரையாடல்களும் "தலித்திய விடுதலைக்கு" எதிரானதாகவும் போய் விடுகிறது என்பதற்கு இதுவே உதாரணமாகக் கூறலாம்.

இது உரையாடல் என்ற அளவில் மட்டுமில்லாது, ஆசிரியரின் கருத்தும் "தலித்" பண்பாட்டிற்கு எதிரானதாக உள்ளது என்பதை ராஜ்கௌதமன் விமர்சனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**"நகர்ப்புறத்துக்கு முன்னேறும் ஆர்வத்தில் இடம் பெயர்ந்த தலித்துகளைப் பற்றி வெளிப்படுகிறது. புதிதாக வந்த ஆரோவில்லில் மாதச் சம்பளத்துக்கு நாலாந்தர வேலை பார்த்து எளிதில் பணம் சம்பாதித்துக் கிராமப் புறத்து தலித்துகள் வசதி பெறுகிறார்கள். சாதித் தொழிலைக் கைவிடுகிறார்கள். இப்போது கிராமத்தில் பாதிக்கு மேல் மெத்தை, ஓட்டு வீடுகளாகின்றன. பிள்ளைகளின் படிப்பிற்காகவே சில தலித் குடும்பங்கள் நகரத்திற்குக் குடிபெயர்கின்றன. இவை ஒரு தலித் விதவைத் தாயை பாதிக்கின்றன"**[10]

என ராஜ் கௌதமனின் "ஆறுமுகம்" புதினம் பற்றியதான விமர்சனத்தில் ஒரு கிராமப்புறத் தாயின் நிலைமை எவ்வாறு மாறியிருக்கிறது என்ற பின்னணியைக் கொண்டு "தலித்" மக்களின் வாழ்க்கையைக் கொச்சைப் படுத்தியிருக்கும் "இமையத்தின்" படைப்புத்தன்மை சாடியுள்ளார்.

**"கிராமத்தில் இருந்து கொண்டு பழைய அடிமைத் தொழில் பார்க்கக் கூடாது, கிராமத்தில் இருந்தால் மகன் கெட்டு விடுவான், நகரத்தில் போய்ப் படித்தால் பெரிய எஞ்சினியராக ஆவான் என்று அந்தத் தாய் (தனபாக்கியம்) ஆசைப்படுகிறாள். கிராமத்து வீட்டை விற்றுப் பாண்டிச்சேரியில் வாடகை வீடெடுத்து மகனை ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் நன்கொடை கொடுத்து சேர்க்கிறாள். வீடு அந்தஸ்தாகவும் களையாகவும் இருக்க வேண்டுமென்று சாமான்கள் வாங்கிச் சேர்க்கிறாள். மகனுக்காகத் தாராளமாகச் செலவளிக்கிறாள். இவளுடைய அபிலாசைகளை பேராசை எனக் கூறவியலாது. இவை பாதிக்கப்பட்டு முன்னேற விழையும் யாருக்கும் இருக்கக் கூடியவைதாம். தலித் உரிமை, சுயமரியாதை சார்ந்த விசயமாக இதனைப் பார்க்கவியலும். பழைய சாதிய அடிமை முறையிலிருந்து விடுபட வேண்டுமென்றால், இருந்து கொண்டிருக்கிற ஒரே மாற்று வாழ்க்கை முறைக்கு, பூர்ஷ்வா மதிப்பீடுகளையும், அதன் வணிக, நுகர்வுப் பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட நவீன, நகர்ப்புற, நடுத்தர வர்க்க வாழ்க்கை முறைக்கு தலித்துகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் மாறுவது தவிர்க்கவியலாத சமூக-பண்பாட்டு மாற்றமாகும். இந்த மாற்றத்தில் நுழைகின்ற தலித் குடும்பங்களில் சில வெவ்வேறு காரணங்களால் சிதைந்து சின்னாபின்னமாகி நகர்ப்புற உதிரி வர்க்கமாக அழிகின்றன. வேறுசில**

**குடும்பங்கள் நல்ல நிலைமைக்கு வருகின்றன. இந்த இரண்டில், முதல் வகை இயக்கம் பற்றியே "ஆறுமுகம்" நாவல் கவனம் செலுத்தியிருக்கிறது. இரண்டாம் வகை இயக்கம் பற்றியல்ல. படைப்பாளி இதைப்பற்றிதான் எழுத வேண்டுமென்பது கட்டாயமல்ல. ஆனால் ஒன்றைப் பற்றி எழுதும் போது மற்றொன்றும் இருக்கிறது என்பதையும் ஒரு படைப்பாளி கவனத்தில் கொள்ளுவான். ஒரு கொள்கையைத் தூக்கிப் பிடிப்பதற்காக ஒரு படைப்பாளி தேவையில்லை. தலித்துகளின் முன்னேற்றத்துக்காக எழுதுவது எப்படி? அப்படித்தான் தலித்துகளின் முன்னேற்ற முயர்ச்சிகளின் சீரழிவைப் பற்றி எழுதுவதும் ஒரு கொள்கையாகும். இப்படி ஒரு கெள்கை இந்த நாவலாசிரியருக்கு உண்டு என்று கருத சாத்தியம் இருக்கிறது"**[11]

என ராஜ்கௌதமன், இமையம் பற்றிய விமர்சனம் நமக்கு, அவரின் படைப்புகளின் தரத்தை மறு பரிசிலனை ச்செய்ய வைக்கத் தூண்டுகிறது. மேலும் அவர்,

"தலித் சமூக மாற்றத்துக்கான முயற்ச்சியை ஆசிரியர் பளிச்சென்று தெரியாதபடி விமர்சித்துள்ளார். கிராமப் புறங்களில் நாயுடு சாதி நிலவுடைமையாளர்களிடம் அடிமை வேலை பார்த்துக் குடிசைகளில் வாழ்ந்து வந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த இளைய தலைமுறை, ஆரோவில்லில் வேலைப்பார்த்து பணம் பண்ணி வசதியான வாழ்க்கைக்கு மாறுவதைச் சீரழிவுப் பண்பாட்டில் சிக்குவதாகப் பார்க்கிறார். மொத்த நகர நாகரீகத்தின் சீரழிவைப் பற்றியல்லாமல், மாற்றத்தைத் தேடிய தலித்துகளின் சீரழிவை, சுலபமாகப் பணம் பண்ண விழையும் இழிவினை, விதிவிலக்காகத் தனபாக்கியம் போல் ஆரோவில் காரனுக்கும் பாலியல் சேவகம் செய்து வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட அவலத்தை ஆசிரியர் கவனப்படுத்துகிறார். என்னா சொன்ன? ஆமாண்டி. நான் பறச்சிதான். ஓசந்த சாதிங்கறவளுக்கு மட்டும் தங்க தலையாடி அச்சடிச்சி....இருக்கு?

என்ற உரையாடல் மூலம், விபச்சாரத்தில் மாட்டிக் கொண்ட பெண்கள் முகவரியற்றவர்கள், பல ஊர்களைச் சேர்ந்தவர்கள். சிலருக்குத் தகப்பன் யார் என்பதே தெரியாது. நிலைமை இப்படியிருக்க "நான் பறச்சிதான்" என்பதும், பறச்சி-ஓசந்த சாதி போன்ற வசனமும், ஓசந்த சாதி என்பன போன்ற வசனங்களும், ஆசிரியரின் தலித்துகளின் மீதான ஓர வஞ்சனையை எடுத்துக் காட்டுவதைப் போல் உள்ளது [12]

இந்த விமர்சனங்கள் வாயிலாக இமையத்தின் தலித் மீதானப் பார்வை என்னவென்று எடுத்துரைக்கிறது. அதே போல், "செடல்" என்ற புதினத்தில்பொட்டுகட்டி விடப்பட்ட (தேவதாசி) முறையை எடுத்துரைக்க வந்த

ஆசிரியர், தலித் மக்கள் மீதான கதைப் போக்கை "செடல்" புதினத்தில் பார்க்க முடிகிறது.

தேவையற்ற வசனங்கள் "சாதியப்போக்கு" கட்டாயம் தேவை என்பதினைப் பதிவு செய்வதைப் போல் உள்ளது. "மண்பாரம்" என்ற சிறுகதைத் தொகுப்பில் "உறவு" என்னும் சிறுகதையில் பஞ்ச வர்ணம், அஞ்சலை இருவருக்கும் இடையே சண்டை நடப்பதாகவும், வீதியில் இருவரும் கட்டிப்பிடித்து தாக்கி, கெட்டகெட்ட வார்த்தைகள் மூலம் தங்களின் கோபத்தைத் தீர்த்துக் கொண்டிருப்பதைப் போல கதை அமைந்திருக்கும். இக்கதையின் போக்கே "தலித்" மக்களின் வாழ்வியலை இழிவுப் படுத்துவதாகவே அமைந்துள்ளதைத் காணலாம்,

> **"ஆயிரமேன்னாலும் குடியானிச்சிவோ எப்படி கிணுக்குமுணுக்குங்காம சும்மாக் கொலையாம இருக்காளுவோ. இங்கப் பாரான், பற சாண்டிநக்கி மக்கள, "ம்"கிறதுக்குள்ளாற "ஒன்னெப் புடி என்னப் புடின்னு" மாரடிச்சிக்கிட்டுத் தெரு சிரிச்சிப் போயி கெடக்குறத, சீ, இவளுங்க யெல்லாம எதுக்காகத்தான் உசுர இந்த சரிகலத்துல வச்சிகிட்டிக்கிறாளுவளோ. இவளுங்களயெல்லாம் சுண்ணாம்பு காளவாயில வச்சி சுட்டாலும் என்னோட வெஞ்சம் தீராது"** [13]

என்ற இந்த உரையாடலில் ஆசிரியரின் எண்ணம் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

அதே போல், வீடியோ மாரியம்மன் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள "சத்தியக்கட்டு" என்ற சிறுகதையில், மேல்சாதிக்காரனால் கற்பம் தறித்த இளம் பெண்ணை, மேல்சாதிக்காரர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொன்று விடுகின்றனர் பின்பு அந்த இளம் பெண்ணை, தலித் சமூகத்தார், கடவுள் நிலைக்கு உயர்த்தி சாமி கும்பிடுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த கதையானது மதுரை வீரன், சுடலை மாடன், அன்னம்மாள் சாமி கதை போன்ற நாட்டுப்புற வழக்காறு கதைக் கதைகளை போல அமைந்துள்ளதை நினைவுப்படுத்துகிறது. இக்கதை எங்கேனும் உண்மையாக நிகழ்ந்த நிகழ்வாக இருக்கும் என்பதையே இக்கதையின் மையம் குறிப்பிடுகிறது. இக்கதையில் இத்தெய்வத்திற்கு எதிராக, நம்பிக்கை இல்லாமல் "தலித்" மக்களே பேசும் உரையாடல்களை ஆசிரியரின் மனதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

உயிர்நாடி-1, உயிர்நாடி-2 என்ற சிறுகதைகளுள் மேல்சாதியை சார்ந்த விவசாயிகள் உயர்வாகக் காட்டப்பட்டு, பிற சிறுகதைகளில் அடித்தட்டு மக்களின்

வாழ்க்கையை எதிர்ப்புறமாக நின்று வாழ்க்கையை விமர்சிப்பதாக அமைந்திருப்பது, தலித்-மக்களுக்கு எதிரான போக்கின் மன நிலையையே எடுத்துக் காட்டுகிறது.

கதைகள் என்பது கற்பனையாக இருந்தாலும், அதில் வரும் கதாப்பாத்திரங்கள் உயிரோட்டமாக இருக்கிறது. அந்த கதாப்பாத்திரங்கள் தலித் சமூகத்தின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகப் படைக்கப்பட்டிருந்தாலும் அது, தலித் சமூகத்திற்கு எதிரானப் போக்கைக் கொண்டு இயங்குவதைக் காணலாம்.

எனவே, இமையம் என்ற இந்த படைப்பாளர், தன்னடையப் படைப்புகளின் மூலம் தலித் மக்களாகிய விளிம்பு நிலை மக்களைக் கதைக் கருவாக்கி உருவாக்கியிருப்பது ஒரு விதத்தில் எதிரானப் போக்கினைக் கொண்டு அமைந்துள்ளதாக மேற் கூறப்படும் கருத்துக்களின் வழியே கூறலாம்.

## 5.17 தலித்-விளிம்பு நிலை மக்களுக்கான விடுதலைக்கானத் தீர்வுகள்:-

விளிம்பு நிலை மக்களாகக் அறியப்படும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைச் சூழலை மையப்படுத்தியுள்ள இமையத்தின் புதினங்களில், சிறுகதைகளில் நேரடியான விடுதலைக்கானத் தீர்வினைக் கொண்டு படைக்கவில்லையென்றாலும், சில கருத்துக்களின் வழி நின்று அவற்றை விளிம்புநிலை மக்களுக்கான தீர்வகளாகக் கூறலாம்.

"ஆறுமுகம்" என்றப் புதினத்தில் தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பாக பெண்கள், கிராமப்புற வாழ்க்கையைத் தவிர்த்து, நகர்ப்புற வாழ்க்கையை விரும்பி நகர்ப்புறங்களை நோக்கி இடம் பெயர்வது என்பது ஆரோக்கியமானதாக இருந்தாலும், நகர்ப்புறங்களுக்கு நகரும் இவர்களின் வாழ்வுச் சிதைகிறது என்பதாகக் கொண்டு அமைந்துள்ள "ஆறுமுகம்" புதினத்தில் பெண்கள், விலை மாதர்களாக மாறிவிடும் நிலையை, தலித் மக்கள் விடுதலைக்கானத் தீர்வினை எட்டாமல், வாழ்க்கை இழந்து தவிக்கும் அவலம் சுட்டப்படுகிறது. இது ஒருவகையான அறிவார்ந்தச் சுட்டுதல் நிலையில் அமைந்து, தலித் மக்களின் வாழ்வியலின் சிக்கல்களைப் புரிந்து கொள்ளச் செய்கிறது.

நகர்ப்புறங்களைத் தேடி, நகரும் மக்கள் மிக எச்சரிக்கையுடன் தங்களின் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்றப் போக்கில் "ஆறுமுகம்" என்ற புதினம் அமைந்துள்ளது.

"செடல்" என்றப் புதினத்தில் பொட்டுக்கட்டி விடப்படும் பழையமரபுத் தொடர்பானக் கதையில், தலித் பெண்கள் மட்டுமல்லாத, தலித் மக்களாகிய

ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையும் இன்னும் மாறாமல் ஆண்டான் அடிமை என்ற நிலையிலேயே உள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இதில் தலித் மக்களுக்கானத் தீர்வுகள் சொல்லப்படவில்லையென்றாலும், மக்கள் பல்வேறு நிலைகளில் கல்வி அறிவு பெற்று, பொருளாதாரத்தில் முன்னேற வேண்டிய அவசியத்தை உரைப்பதாகக் கூறப்படுகிறது.

செடல்-புதினத்தில் சாதியப் போக்குகள் கொண்ட இந்து சமயத்திற்கு மாற்றாக "கிறித்துவ" சமயம் இருக்கிறது என்பதை இக்கதையில் சொல்லப்பட்டுள்ளது. செடல்-புதினத்தின் மூன்றாவது பாகத்தில் தலித் மக்கள் ஒன்றுபட்டிருப்பதையும், மேல்சாதிக்காரர்களை எதிர்க்கும் நிலையில், கொலைச்சிந்து அருணாச்சலம் போன்ற கதாப்பாத்திரத்தின் மூலம், தலித் மக்களின் எதிர்ப்பு எண்ணங்கள், சாதிய விடுதலைக்கான தீர்வுகளாக சொல்லப்பட்டிருப்பதைக் கூறலாம்.

"செடல்" என்ற கதாப்பாத்திரமும், கற்பு என்ற நிலையில் மிக கண்ணியமாக நடந்து கொள்வதும், காமத்தை வெறுக்கும் கதாப்பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளது. நடராஜ் உடையார் தன்னை வைப்பாட்டியாக வைத்துக்கொள்கிறேன் எனக் கூறும் போது "செடல்" அறிவு சார்ந்து பேசும் உரையாடல்கள், தலித் மக்கள் குறிப்பாக பெண்களுக்கான விழிப்புணர்வு நிலையைத் தட்டி எழுப்புவதாக அமைந்துள்ளது எனக் கூறலாம்.

கோவேறு கழுதைகள் புதினத்தில் கீழ்சாதிக்கு கீழ்சாதியான மக்களின் வாழ்வு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பது, சாதியக் கட்டுக்குள் அடிநிலையில் இருக்கும் அடித்தட்டு மக்கள், தங்கள் விடுதலைக்கான தேடலை விட்டு விட்டு, இருக்கும் தனக்கு கீழே இன்னொரு சமூகத்தை கீழ்சாதியாகக் கருதி அவர்களின் மீது சாதிய வருணம் பூசுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதாகக் கதையின் போக்கு அமைந்துள்ளது.

தலித் மக்கள் தங்களில் சாதிய அடி நிலையிலிருந்து மீண்டு வருவதற்கானத் தீர்வு என்பதே, அவர்களுக்கு கீழ் ஒரு சமூகமும் இல்லை என்பதை உணர்ந்து, ஒட்டுமொத்த சமூகத்திலும் சாதியப் போக்கு இல்லை என வலியுறுத்தி முன்னேற விளைவதே வாழ்வு என்ற குறிக்கோளினைக் கொண்டு இருக்க வேண்டும் என்பதாகவே "கோவேறு கழுதைகள்" புதினம் அறிவுறுத்துகிறது.

"வீடியோ மாரியம்மன்" சிறுகதையில் சாதியப் போக்கு மாற கலப்ப மணம் அவசியம் என்பதை வலியுறுத்துகிறது. ஆனால் கதையில் காதலுக்கு எதிர்ப்பு

இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள ஆசிரியர் காதல் திருமணம் புரிபவர் சமூகத்தை எதிர்த்துப் போராடக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. தற்கொலைகள் தீர்வாகது என்பதை இக்கதை வலியுறுத்துக் காணமுடிகிறது.

"சத்தியக்கட்டு" என்ற சிறுகதையில் தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண்., ஏமாற்றப்பட்டு, கர்ப்பம் தறித்த நிலையில் கொல்லப்படுகிறார். இதனை அறிந்த ஒட்டு மொத்த தலித் மக்களும் ஒன்று சேர்ந்து, மேல்ச்சாதி காரர்களுக்கு எதிராக நின்று குரல் கொடுத்து தங்களின் எதிர்பைக் காட்டியிருப்பது என்பது தலித் மக்களுக்கான விடுதலைத் தீர்வே ஒற்றுமை என்பதாக வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதாக எடுத்துக்கொள்ளலாம்.

"ஊர்காலி மாடுகள்" சிறுகதையில் தலித்துகள் அடங்கிப்போகும் நிலை காட்டப்பட்டுள்ளது. இதில் வரும் தலித் சமூகத்தைச் சார்ந்த ஒருவன் ஊரின் நடுவே கட்டிவைத்து ஊரே அடிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. இக்கதையின் நேர் எதிராக பாமாவின் சிறுகதைகளுள் ஒன்றான "தாத்தாவும் நான்கு எருமைகளும்" அமைந்திருப்பதை ஒப்பிட்டுபார்க்கவேண்டும்.

தாத்தாவும் நான்கு எருமைகளும் சிறுகதைகளுள், மேல்த்தட்டு சமூகத்தினை எதிர்த்து பேசும் நிலையாக தாத்தாவின் உரையாடல் அமைந்திருக்கும். தலித் சமூகத்தார் அடிமைத் தனையிலிருந்து மீண்டும் வரவேண்டுமானால் "எதிர்ப்பு" ஒன்றே விடுதலைக்கானத் தீர்வாக அமையும் என பாமா வழியில் நின்று "ஊர்காள மாடுகள்" அமையவில்லையென்றாலும், "அன்பு" அடக்கமும் ஒருவித எதிர்ப்புத் தன்மையே எனக் காட்டப்பட்டுள்ளது.

"கொலைச் சேவல்" என்ற சிறுகதையில் பெண்கள் காமம் என்ற நிலையைத் தாண்டி வாழ்க்கை என்ற நிலையைக் காணவேண்டும் என்ற போக்கில் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

தலித் மக்களின் கீழ் நிலையும், பெண்களின் நிலையும் ஒன்றே என்பதை "கொலைச் சேவல்" சிறுகதைகள் வெளிப்படுத்துகிறது. "நிஜமும் பொய்யும்" என்ற சிறு கதையில், கிராமப்புறத்தில் இருந்தால் சாதிய விடுதலை என்பது கிடைக்காது, நகர்ப்புறங்களுக்கு நகர்ந்து சென்று, வாழ்வாதாரத்தைத் தேடிக் கொண்டால், அது சாதியப் போக்கிலிருந்து தலித்துகளை விடுவிக்கும் என்பதாக இக்கதை அமைந்துள்ளது.

"வனாந்தரம்" என்ற சிறுகதையில் வேலை தரும் எஜமானியை எதிர்த்துப் பேசும் தலித் பெண்களை விடுதலைத் தீர்வின் அடையாளம் எனக் கூறலாம்.

"அரையாள்" என்ற சிறுகதையில், வேலைக்குச் செல்லும் இடத்தில் தன் மகனை இழிவாகப் பேசிய எஜமானியை அடிக்கம் தலித் தாய்மையை, பெண்களின் அடிமை விடுதலைக்கான அச்சாகவும், தலித் மக்களின் வாழ்வின் எதிர்ப்பாகவும் இருந்த தலித் தாயைக் குறிப்பிடலாம்.

## 5.18 சாதிய விடுதலைக்கானத் தீர்வு:-

1. அடித்தட்டு மக்கள் "சாதி" என்ற கட்டில் இருந்து விடுதலை அடைய வேண்டுமெனில் எதிர்த்தல் என்ற பண்பைக் கொண்டிருக்க வேண்டும். அதே வேளையில் "ஒற்றுமை" என்ற நிலையும் சாதிய விடுதலைக்கானத் தீர்வாகக் கூறலாம். இது "சத்தியக்கட்டு" "அரையாள்" "வனாந்தரம்" போன்ற சிறுகதைகளிலும், "செடல்" புதினத்திலும் காணமுடிகிறது.
2. தான் வாழும் கிராமத்தைத் தவிர்த்து, நகர்ப்புறங்களுக்கு இடப்பெயர்வு அடைதல் ஒரு வகையில், சாதிய விடுதலையைத் தேடித்தரலாம். இது "நிஜமும் பொய்யும்" என்ற சிறுகதையிலும் "ஆறுமுகம்" என்ற புதினத்திலும் காணமுடிகிறது.
3. இந்திய வருணாசிரம முறை என்பதே படிநிலைச் சமூகத்தின் சாதியப் பாகுபாடு, இதுவே தீண்டாமையை வலியுறுத்தி, தலித் மக்களை அடிமை நிலைக்கு இட்டுச் சென்றது. இந்நிலை மாற வேண்டுமானால், தலித் மக்கள் விழிப்பணர்வு பெற வேண்டும் இதனை "கோவேறு கழுதைகள்" பதிவு செய்துள்ளது.
4. கீழ்சாதிக்கும் கீழ்சாதி என்ற நிலையை மையப்படுத்தி படைக்கப்பட்ட கோவேறு கழுதைகள் புதினத்தின் மூலம், தலித் மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்துள்ளனர். இவர்கள் ஒன்றிணைந்தாலே தலித் மக்களக்கான தீர்வாக அமையும் என்ற நோக்கில் இப்புதினம் அமைந்துள்ளது.
5. சாதியப் போக்குகளைக் களைய கலப்புத் திருமணங்கள் அவசியம் இது ஒரு வகையான தீண்டாமைக்கு எதிரான நிலை எனலாம். தீண்டாமையை கலப்புத் திருமணங்கள் ஒழித்து விடும் என்பதை மையமாகக் கொண்டு, "பூவும் இரவும்"சிறுகதை படைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.
6. கல்வி, பொருளாதாரம் என்ற இரண்டின் துணைகொண்டு சாதியத்தை ஒழிக்கலாம், இந்த இரண்டே தலித் மக்களின் விடுதலைக்கான ஒட்டுமொத்தத் தீர்வு என்பதை "விடியாத இரவு" "மலரின் காதல்" "ஊர்கால் மாடுகள்" "சத்தியக்கட்டு" "வனாந்தரம்" "அரையாள்" "வீடியோ மாரியம்மன்" "அம்மா" "நிஜமும் பொய்யும்" போன்ற சிறுகதைகள் மூலம் சொல்லப்பட்டுள்ளது.
7. தலித் அல்லது விளிம்பு நிலை மக்களின் வாழ்வு விடியலை நோக்கி செல்வது ஒன்றே விடுதலைக்கானத் தீர்வு என்பதாக, "ஆறுமுகம்" நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.. நகர்ப்புறங்களில் வேலை தேடிச் செல்லும் பெண்கள்

எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்பதாக தனபாக்கியத்தின் வாழ்க்கை தீர்வாகச் சொல்லப்பட்டுள்ளது.

8. பண்ணை வேலை, களை பிடுங்குதல், கூலி வேலைக்குச் செல்லுதல் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்றால் மேல் கீழ் என்ற பேதமும் காணால் போகும் என்பது இமையம் படைப்புகளின் சிறுகதைகள் எடுத்துரைக்கிறது.
9. தீண்டாமை என்பது மனித தன்மையற்ற செயல், தீண்டாமை பார்ப்பது என்ற நோக்கில் இமையத்தின் படைப்புகள் தீர்வுகளாகப் படைக்கப்பட்டுள்ளது.
10. சாதியைத் தன் இருப்பிடமாகக் கொண்டு செயல்படும் இந்து சமூகத்திலிருந்து விடுதலை பெற்றால், அது ஒருவகையில் சாதிய விடுதலையாகக் கருத இடமுண்டு என்பதாக, "கிறித்துவம்" சமயம் மாறுதல் சாதிய விடுதலைக்கானப் பின்னணியாக அமையும் என்பதை "செடல்" "கோவேறு கழுதைகள்" போன்ற புதினத்தின் வழியே கூறப்பட்டுள்ளது.
11. பழைய மரபுகள், வழக்காறுகள், புராணங்கள், சாமி கதைகள், போன்றவற்றைப் புறம் தள்ளி, ஆக்கப் பூர்வமாக செயல்பட்டால், சாதிய விடுதலை சாத்திம் என்பதாக "செடல்" புதினம் உள்ளது.
12. பெண்ணிய விடுதலையே, சாதியப் போக்கிலிருந்து விடுதலை என்பதாக "செடல்" புதினம் அமைந்துள்ளது.
13. தலித் மக்களின் வாழ்வியல் ஆதாரமாக விளங்கும் பாரம்பரியத் தொழில்களை, மாடு மேய்த்தல், பண்ணை அடிமையாள், கூலி வேலை, எடுபிடி வேலை, களையெடுத்தல், சுடுகாட்டு வெட்டியான் வேலை, அழுக்குகளைச் சுத்தப்படுத்துதல், மலம் அள்ளுதல், குப்பைகளை அகற்றுதல், துணி வெளுத்தல், செருப்பு தைத்தல், போன்றவைகளை விடுத்து கல்வி, பொருளாதாரம் என முன்னேற்றப் பாதையில் தலித்துகள் நடந்தால் "விடுதலை" என்பது மிகத் தொலைவில் இல்லை என்பதையே இமையத்தின் படைப்புகள் படைக்கப்பட்டுள்ளது.
14. கழைக் கூத்தாடிகள், காமத் தரகர்கள், நிகழ்த்துக் கலைஞர்கள், கதைச் சொல்லிகள் போன்ற விளிம்பு நிலை சார்ந்த மனிதர்களின் வாழ்க்கை, "செடல்" "ஆறுமுகம்" போன்ற புதினங்களின் வாயிலாக கூறப்பட்டிருப்பது என்பது, அவர்களது மரபு சார்ந்த இத்தொழிலை விடுத்து, அறிவுப்பூர்வமான நிலையில் அவர்கள் இயங்கக் கற்றுக் கொள்வதுஇம்மக்களுக்கான தீர்வாக அமையும்.
15. துணி வெளுத்தல் என்ற மரபு சார்ந்த தொழிலுக்கு மாறாக "நவீன சலவையகம்" "லாண்டரி" போன்றவை அமைத்து செயல்படுவது, வீடுகளுக்குச் சென்று முடித்திருத்தம் செய்தலுக்குப் பதிலாக "பார்பர் சாப்" நவீன முடித்திருத்தகம் அமைத்து அங்கு அனைவரையும் வரச் செய்தல், அழுக்குத் துணிகளை

தைப்பதற்கு பதிலாக, நவீன தையலகம்-Tailening அமைத்து செயல்படுதல் ஆகியவை தலித் விடுதலைக்கானத் தீர்வாக சொல்லப்பட்டுள்ளது.

16. தலித்துகள் தங்களுக்குக் கீழ் ஒரு தாழ்நிலை சமூகத்தை உருவாக்காமல் அல்லது இல்லாமல் பார்த்துக் கொள்ளுதல் "கோவேறு கழுதைகள்" புதினம் மூலமாகத் தீர்வாகச் சொல்லப்பட்டுள்ளது.
17. தனக்கென்று நிலம் இல்லாமல் உழைக்கும் ஏழைகள், ஒன்றாகக் கூடி எதிர்ப்பு என்ற தன்மையில் ஒன்றுபடுதல் தீர்வாகச் சொல்லப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் தலித் அல்லது விளிம்பு நிலை மக்களுக்கான விடுதலைக்கானச் சிந்தனைகளாக இமையம் தன் படைப்புகளின் வாயிலாக எவற்றை வெளிப்படுத்துகிறார் என்பதைக் கண்டோம். இனி தலித் மக்களின் வாழ்வியல் தொடர்பான சிக்கல்கள் மற்றும் தலித்தியத்திற்கான விடுதலையாக எவற்றை முன்னுருத்திக் கூறுவது என்பதைக் காணலாம்.

### 5.19 சிக்கலான விவாதங்கள்:-

இமையம் படைப்பாளர் தலித்மக்களின் வாழ்க்கையை பெரும்பான்மையாக எடுத்துக் கொண்டு புதினங்கள், சிறுகதைகள் அமைத்துப் படைப்புகளைப் படைப்பு வரவேற்கத் தக்கது என்றாலும், இனிவரும் காலங்களில் கீழேக் குறிப்பிடப்படும் சில சிந்தனைக் கருத்தோட்டங்களோடு அவரது படைப்புகள் படைக்கப்படுமேயானால், அது தலித் மக்களுக்கான முழுமையான தீர்வாக இலக்கியப் போக்கில் அமையலாம்.

1. தலித் மக்களின் வாழ்க்கைச் சூழலை மையப்படுத்தி எழுதிவரும் நவீனப் படைப்பாளர், தலித் சிந்தனை வாதி இமையம் அவர்கள், தலித் மக்கள் எத்தனையோ பேர் முன்னேறிய நிலையில் உள்ளவர்களை மையப்படுத்தி நேர்நிலையில் படைப்புகள் படைக்கலாம். இதன் வாயிலாக, தலித் மக்களின் மீதான அடையாளம் மாற வாய்ப்புள்ளது.
2. வெற்றி பெற்ற காதல் திருமணங்கள், நாடெங்கும் பரவியுள்ளனர். இவர்களது வாழ்க்கையின் வெற்றிகளை, வாழ்க்கை நிகழ்வுகளை கதையின் பொருண்மையாக அமைத்துப் படைப்புகள் படைத்தல்.
3. தலித் மக்களுக்காக நேர்மையான வழியில் போராடும் மேல்நிலைத் தலித் சார்பாளர்களை மையப்படுத்தலாம்.
4. கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் இழைக்கப்படும் கொடுமைகளை மையப்படுத்தலாம்.

5. உயர் அதிகாரிகளின் மெத்தனப் போக்கு, அதிலும் குறிப்பாக தலித்துகளுக்கு எதிராக இருக்கும் அதிகாரிகளை மையக்கருத்தாகக் கொண்டு, படைப்புகளின் மூலம் அவர்களுக்கு சவுக்கடி கொடுத்தல்.
6. நீதி, நேர்மை, அகிம்சை போன்ற வழிகளில் தலித்திய எதிர்ப்புகளை மையப்படுத்தலாம்.
7. பெரியாரின் வழிநின்று, அம்பேத்காரின் வழிநின்று சீர்திருத்தக் கதைகளைத் தன் கதைக் களமாக அமைத்துக் காட்டலாம்.
8. சாதிச்சான்றிதழ் கட்டாயப்படுத்தும் நிலையை எதிர்த்து குரல் தரலாம், சாதி வேண்டாதோர் என்ற நிலையில் பளிளயில் குழந்தைகளைச் சேர்த்தல் இதனை மையமாகக் கொண்டு படைத்தல்.
9. நாட்டில் நடக்கும் அன்றாட நிகழ்வுகளில் சாதியச் சண்டைகளுக்கு எதிராகத் தன் படைப்புகளைப் படைத்தல்.
10. தலித் மக்களின் இழிவான வாழ்வை மையப்படுத்தாமல், கடவுள் சார்ந்த, கொள்கைகள், கிறித்துவம், இசுலாமியம் போன்ற மதங்களின் சாதியற்றத் தன்மையை ஆதரிக்கும் விதமாக படைப்புகள் படைக்கலாம்.

மேற்கூறப்பட்ட சிந்தனைப் பொருள்கள் யாவும் விவாதத்திற்குரியவையாகும். இமையம் போன்ற படைப்பாளர் முயன்றால் ஓரளவிற்கு வெற்றியடையலாம்.

சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றின் மூலமாகவே படைப்பாளன் நின்று இயங்க வேண்டியதில்லை. படைப்பாளன் என்பவன் சமூகத்தின் பிரச்சனைக்குரிய விவாதங்களை முன்னுருத்தி நேர்மையான வழியில் விடைகளைத் தேடுதல் என்பது படைப்பாளனுக்கானத் தகுதியாகக் கொண்டு, பொதுநிலைச் சார்புகளை மையப்படுத்தி எழுதுதல் போன்றவற்றைப் பின்பற்றுதல் ஆகியவைகளை தனது எழுத்துக்களின் மூலம் வெளிப்படுத்தலாம்

பல்வேறு நிலைகளில் படைப்புகள் அடைய சிந்தனைக்குரிய தலித்தியச் சிந்தனைப் போக்கை, நவீன முறையில் அமைத்துக் காட்டுதல், சீர்திருத்த நோக்கில் படைப்புகளை அமைத்தல் போன்றவற்றையும் தனது எழுத்துக் கடமையாக இமையம் கருத வேண்டும்.

பெண்களின் முன்னேற்றம் குறித்த நிலையில் பாலுறவு, கொச்சை சொற்கள், காமம், இழிவு என்ற நிலைகளைக் கடந்து, கிராமப்புற , நகர்ப்புறப் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றி கதைகளாக எழுதலாம். முடிந்தவரை மரபு வழியில் அமையும் பாலியல் சார்ந்த சொற்களைப் பயன்படுத்தாமல், தவிர்த்து எழுதலாம் இவையும் ஒரு எழுத்தாளரின் புனிதக்

கடமை என்பதைப் படைப்பாளர் சார்ந்து வருங்காலத்தில் படைப்புகள் இதனினும் சிறந்ததாக அமைக்க செய்ய வேண்டும்.

# தொகுப்புரை

விளிம்பு நிலை மக்களின் சமூதாய வாழ்வே மிகத்துன்பகரமானது. சாதியின் பெயரால் இந்நிலை மக்கள் தலித்துக்கள் என தீண்டாமைப் பேசப்பட்டு காலங்காலமாக மிகக் கேவலமான தொழில்களைச் செய்து வருகிறன்றனர். மேல்த்தட்டு மக்கள் இவர்களிடத்து  தீண்டாமைப் பாராட்டி வாழ்வதற்கேற்ற சூழலை ஏற்படுத்தாமல் தலித் மக்கள் வாழவேத் தகுதியற்றவர்கள் என்பதாகக் கருத்துக்களை தலித் மக்களுக்கான வாழ்க்கைச் சிக்கல்களாக் கூறுவதுடன் அவ்வின மக்களின் இனவிடுதலைக்கானக்கானக் களங்களாகப் படைப்பிலக்கியங்கள் எவ்வாறு திகழ்கிறது என்பது இதனுள் ஆய்து சொல்லப்பட்டுள்ளது. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க இலக்கியங்கள் எவ்வாறு முயன்றுள்ளது என்பதும் அதில் எவ்வாறு தோற்றுள்ளதும் என்பதும் இன்றுள்ள நவீன இலக்கியங்கள் தலித்துக்களின் உரிமைகளுக்கு எவ்வகையில் குரல் தருகிறது என்பதை இதன் மூலம் தக்கச் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இமையத்தின் படைப்புகளின் வழியே நின்று புதினங்களில், சிறுகதைகளில் தலித் மக்களுக்கான வாழ்க்கைச் சிக்கல்கள் மற்றும் அவற்றிலிருந்து மீள்வதற்கானத் தீர்வுகளும் எவ்வாறு உரைக்கப்பட்டுள்ளது என்பதும் இதனுள் ஆய்ந்து சொல்லப்பட்டுள்ளது. தீர்வுகள் என்பது நிரந்தரமற்றது, இன்றையச் சிக்கல்கள் ஓய்ந்தாலும் நாயைச் சிக்கல் புது வடிவத்துடன் தொடரும் என்பதான விளக்கங்களுடன் சொல்லப்பட்டு விள்க்கப்பட்டுள்ளது. புதிய இலக்கியங்களான நவீன இலக்கியங்களே சமூகத்தின்  பிரச்சனைகளை அணுகி அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்துவந்துள்ளது என்பதானக் கருத்துக்கள் இதனுள் பதியப்பட்டுள்ளது. இமையத்தின் படைப்புகளான சிறுகதை மற்றும் புதினங்களில் விளிம்பு நிலை மக்களுக்கானத் தீர்வுகள் எவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்பதும் ஆசிரியரின் நோக்கம் தீர்வுகளைக் கூறுவதில்லை என்பதும், இமையத்தன் படைப்பாக்கச்சக்தி தலித் மக்களை எள்ளி நகையாடுவதற்கே என்பதும் , தன் கதைகளில் தலித் மாந்தர்களைச் சுற்றும் கதைகளில் தலித் மக்கள் மிக மோசமானதாகப் படைத்துக்காட்டி த் தலித் மக்களின் சமூக நிலையை மேலும் பலவீனவாக்கும் முயற்சிகள் கண்டுணரப்பட்டு இவ்வியலில் தகுந்த ஆதாரங்களுடன் சொல்லப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | லிப்கோ ஆங்கில அகராதி | - | M எழுத்து வரிசை. |
| 2. | மேலது. | - | மேலது |
| 3. | எம். வேத சகாயகும் | - | விளம்பு, மையம், மொழி. பக்-91. |
| 4. | ராஜ் கௌதமன் | - | தலித்திய விமர்சனக் கட்டுரைகள், பக்- 21. |
| 5. | மேலது | - | பக்-21. |
| 6. | இமையம் | - | கோவேறு கழுதைகள், அத்-5, பக் - 58. |
| 7. | ராஜ் கௌதமன் | - | தலித்திய விமர்சனக் கட்டுரைகள், பக்-114. |
| 8. | கோவேறு கழுதைகள் | - | பக்-16. |
| 9. | மேலது | - | பக்-17. |
| 10. | ராஜ் கௌதமன் | - | தலித்திய விமர்சனக் கட்டுரைகள், -பக்-114. |
| 11. | மேலது | - | பக்-115. |
| 12. | மேலது | - | பக்-115. |
| 13. | மண்பாரம் | - | பக்-157. |